# உதயன்

விலை ரூபா 6-00

கூடர்:15 வள்ளுவர்ஆண்டு 2030 கார்த்திகை 27 திங்கட்கிழமை (13-12-1999) UTHAYAN A Lively National Tamil Daily கதிர்:14


## மஸ்கெலியாவில் பெற்றோல் குதம்

## நேற்று குண்டு வைத்துத் தகர்ப்பு!

கொழும்பு, டிசெ. 13

மஸ்கெலியா கவரவல தோட்டத்தில் அமைந்திருந்த பெற்றோல் குதம் ஒன்று நேற்று அதிகாலை 1-30 மணியளவில் குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டுள்ளது.

இந்தக் குதத்தில் 21 ஆயிரம் லீற்றர் பெற்றோல் இருந்தது என்றும் —

குண்டு வெடிப்பால் பெற்றோல் முழுவதும் எரிந்து நாசமானது என்றும் —

மஸ்கெலிய பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி லால் உடுகமகே தெரிவித்தார்.

தகர்க்கப்பட்ட குதத்தில் எரிந்து அழிந்த பெற்றோலின் பெறுமதி மூன்று லட்சம் ரூபா எனத் தெரிவிக்கப்பட்டது.

இந்தக் குண்டு வெடிப்புத் தொடர்பாகப் பொலீஸார் விசாரணைகளைமேற்கொண்டுள்ளனர். (உ-க-3)

## வெற்றிலைக் கேணியில் உயிரிழந்த 29 புலிகள்

வவுனியா, டிசெ. 13

வெற்றிலைக்கேணி மற்றும் கட்டைக்காடு பகுதியில் இடம்பெற்ற "ஓயாத அலைகள் 3" நடவடிக்கையின் போது தமது தரப்பில் 29 பேர் உயிரிழந்துள்ளதாக விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

அவர்களின் விவரம் வருமாறு:-

★ லோகா (இராசதுரை ராகினி—பதுளை)

★ கல்பனா (கதிரமலை சுதர்சினி—மட்டக்களப்பு)

★ விஜிதா (வடிவேலு சசி—மட்டக்களப்பு)

★ ஜெயந்தி (அருணாகிரி தவமலர்—மட்டக்களப்பு)

★ கஜந்தா (குழந்தைவேல் சாந்தி—மட்டக்களப்பு)

★ மதுரகீதன் (கிருஷ்ண பிள்ளை சுதாகரன்—மட்டக்

(10 ஆம் பக்கம் பார்க்க)

# கட்டைக்காடு, வெற்றிலைக்கேணி

# தங்கள் வசமென புலிகள் அறிவிப்பு!

## மேலதிக துருப்புக்கள் அப்பகுதியில் குவிப்பு

யாழ்ப்பாணம், டிசெம்பர் 13

ஆனையிறவுக்கு மேற்கே வெற்றிலைக் கேணி, கட்டைக்காட்டுப் பகுதிகளைத் தாம் கைப்பற்றியிருப்பதாக விடுதலைப் புலிகள் நேற்று அறிவித்தனர்.

அதை அண்டிய பிரதேசங்களில் பெருமளவில் துருப்புகள் குவிக்கப்பட்டு அந்தப் பிரதேசங்கள் பலப்படுத்தப்பட்டிருப்பதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

வெற்றிலைக்கேணி, கட்டைக்காட்டை நேற்று முன்தினம் இரவும் —

அவற்றுக்கும் ஆனையிறவுக்கும் இடையில் உள்ள புல்லாவெளியை நேற்றும் — தாங்கள் கைப்பற்றியதாக புலிகள் அறிவித்தனர்.

வெற்றிலைக்கேணி, கட்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## தாழமுக்கம்

கொழும்பு, டிசெ 13

முல்லைத்தீவுக்குக் கிழக்கே 250 கிலோ மீற்றர் தூரத்தில் வங்காள விரிகுடாவின் தென் மேற்குப் பகுதியில் தாழமுக்கம் ஏற்பட்டுள்ளதாக வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது.

இந்தத் தாழமுக்கம் விரிவடைந்து நாட்டின் வடகிழக்குக் கரையோரப் பகுதி

[10 ஆம் பக்கம் பார்க்க]

## ஓய்வுபெறும் வயதெல்லை 65 ஆகும்

கொழும்பு, டிசெ. 13

அரச ஊழியர்கள் ஒய்வு பெறும் வயதெல்லை 60 இலிருந்து 65 ஆக அதிகரிக்கப்படவுள்ளதாக பொது நிர்வாக

[10 ஆம் பக்கம் பார்க்க]

## கரையோரப் பகுதிகளில் நேற்றுஷெல்கள் வீழ்ந்தன

### தனங்களப்பில் நால்வர் காயம்

யாழ்ப்பாணம், டிசெ. 13

பூநகரிப் பகுதியிலிருந்து விடுதலைப் புலிகள் ஏவியதாகக் கருதப்படும் ஷெல்கள் நேற்றுக்காலை முதல் தென்மராட்சியில் தனங்களப்பு, மறவன்புலோ, கோயிலாக்கண்டி, நாவற்குழி மற்றும் பாசையூர் ஆகிய பகுதிகளில் வீழ்ந்து வெடித்தன.

இதனால் பொதுமக்கள் பதற்றம் அடைந்து இடம் பெயர்ந்த வண்ணம் உள்ளனர்.

அல்லாரை, கோயிலாக்கண்டி ஆகிய பகுதிகளில் வீழ்ந்து வெடித்த ஷெல்களி

(10ஆம் பக்கம் பார்க்க)

## பொருள்கள் தட்டுப்பாடு ஏற்பட இடமே இல்லை!

### அரச அதிபர் கூறுகிறார்

யாழ்ப்பாணம், டிசெ.13

'குடாநாட்டில் போதியளவு உணவுப் பொருள்கள் கையிருப்பில் உள்ளன. பொருள்களுக்குத் தட்டுப்பாடு ஏற்பட இடமில்லை' என்று யாழ் அரச அதிபர் க. சண்முகநாதன் அறிவித்துள்ளார்.

உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்களுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக வெளியான தகவல்கள் குறித்தே அவர் இப்படிக் கூறியுள்ளார்.

சரக்குக் கப்பல்களின் போக்குவரத்துஇடையூறின்றி நடைபெற்றுவருகின்றது என்றும்—

எக்காரணம் கொண்டும் உணவுப் பொருள்களுக்குத் தட்டுப்பாடு ஏற்பட இடம் இல்லை என்றும்—

அவர் மேலும் சொன்னார்.

செயற்கைத்தட்டுப்பாட்டை ஏற்படுத்தும் முயற்சிகளுக்குத் துணைபோகவேண்டாம் என்றும் அவர் பொதுமக்களைக் கேட்டுள்ளார். (உ-3)

## இடம்பெயர வேண்டுமா என்பதை பொதுமக்களே தீர்மானிக்கட்டும்!

### படையினர் தடுக்க மாட்டார்கள் என்கிறார் தளபதி

யாழ்ப்பாணம், டிசெ. 13

"புலிகளின் அறிவித்தலைக் கேட்டு இடம்பெயர வேண்டுமா என்பதை பொதுமக்களே தீர்மானிக்கட்டும். அதில் தலையிடவோ அதைத் தடுக்கவோ படையினர் எவரும் முயற்சிக்கமாட்டார்கள்.

—இவ்வாறு வடபகுதி இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் சரத் முனசிங்க நேற்றிரவு உதயனுக்குத் தெரிவித்தார்.

குடாநாட்டின் தற்போதைய நிலைமை குறித்துக் கேட்டபோது அவர் மேலும் தெரிவித்ததாவது:-

[10 ஆம்பக்கம் பார்க்க]

# இடைக்கால நிர்வாகசபை

# ஜனவரி 1 முதல் இயங்கும்

## ஜனாதிபதி சந்திரிகா அறிவிப்பு

கொழும்பு, டிசெ. 13

தமிழ் மக்களுக்கு உடனடி அரசியல் பிரதிநிதித்துவத்தை வழங்குவதற்காக அடுத்த மாதம் முதலாம் திகதியில் இருந்து வடக்கு — கிழக்கில் இடைக்கால நிர்வாக சபை செயற்படத் தொடங்கும் என்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

கண்டியில் உள்ள ஜனாதிபதி மாளிகையில் வைத்து கொழும்புத் தமிழ் பத்திரிகைகளுக்கு அளித்த பேட்டியில் அவர் இப்படிக் கூறியுள்ளார்.

அந்தப் பேட்டியில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

வடக்கு — கிழக்கு மாகாண சபை செயற்படாதமையால் தமிழ் மக்களுக்குத் தங்களது தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு முடியாத நிலை காணப்படுகின்றது. ஆளுநர் நியமனத்துக்குப் பின்னரும்

[10 ஆம் பக்கம் பார்க்க]

## கூட்டணியின் தீர்மானம்

கொழும்பு, டிசெ. 13

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி வேட்பாளரையோ அல்லது ஐ.தே.க. கட்சி வேட்பாளரையோ ஆதரிப்பதில்லை என தமிழர் விடுதலைக் கூட்டணியின் மத்திய குழு நேற்றுக் கூடித் தீர்மானித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது

(10ஆம் பக்கம் பார்க்க)

### அநுராதபுரம் சிறைச்சாலையில்

## இம்சைக்கு உள்ளாகும் தமிழ்ப் பெண்கைதிகள்

கொழும்பு, டிசெ. 13

யாழ் மாவட்டத்தில் கைது செய்யப்பட்டு அநுராதபுரம் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ்ப் பெண் கைதிகள் அங்குள்ள சிங்களப் பெண் கைதிகளால் பல்வேறு வகையில் துன்புறுத்தப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தமிழ்ப்பெண் கைதிகளை சிங்களப் பெண்கைதிகள் பலவந்தமாக வேலைவாங்குவதாகவும்...

குறிப்பாக மலக்கிடங்கில் உள்ள மலத்தை அள்ளி அருகிலுள்ளவாய்க்காலில்கொண்

(10 ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## இராமு குணலிங்கம்

உரும்பிராய் மேற்கைச் சேர்ந்த இராமு குணலிங்கம் நேற்று (12—12—99) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

இவர் சின்னம்மாவின் அன்புக் கணவரும் குணேஸ்வரன், தயாளன், பிரதாபன், கோகுலன் ஆகியோரின் அன்புத் தந்தையும் சுகந்தி (அனலைதீவு), கி. பத்மராஜா, சுந்தரலிங்கம் ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13-12-99) திங்கட்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் உரும்பிராய் வேம்பன் மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
த. நாகேஸ்வரன்
(பாப்பா)

உரும்பிராய் மேற்கு,
உரும்பிராய்.

(71752)

## திருச்செல்வம் ரவிதர்சன்

[கொக்குவில் இந்துக் கல்லூரி, ஆண்டு 9 மாணவன்]

கொக்குவில் கிழக்கைப் பிறப்பிடமாகக் கொண்ட திருச்செல்வம் ரவிதர்சன் 11-12-1999 சனிக்கிழமையன்று அகாலமரணம் அடைந்துவிட்டார்.

அன்னார் திருச்செல்வம் [பிரான்ஸ்] ஹேமலதா தம்பதிகளின் அன்புப் புதல்வனும் சர்மிளா (கொக்குவில் இந்துக் கல்லூரி, கலைப்பிரிவு—1999), சுதர்சன் [கொக்குவில் இந்துக் கல்லூரி, வர்த்தகப்பிரிவு—2001], நிதர்சன் [கொக்குவில் ஸ்தான அ. த. க. பாடசாலை] ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற சின்னையா மற்றும் அன்னம்மா, மகேசானந்தன், காலஞ்சென்ற சிவனேஸ்வரி ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13-12-99) திங்கட்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக நண்பகல் 12 மணிக்கு கோம்பையன்மணல் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திருமதி தி. ஹேமலதா [தாய்]

பழைய தபாற்கந்தோர் ஒழுங்கை,
தலையாழி, கொக்குவில்.

(71745)

## கந்தையா தவசிங்கம் ( அப்பன் )

நீர்வேலி கரந்தனைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் சுவிஸில் வசித்தவருமாகிய கந்தையா தவசிங்கம் (அப்பன்) அவர்கள் 07-12-99 சுவிஸில் காலமானார்.

அன்னார் கந்தையா-பரிமளம் தம்பதிகளின் அன்பு மகனும் ராஜசிங்கம் (சவூதி), லலிதா (டென்மார்க்), பிறேமலதா (கொழும்பு), சுதா ஆகியோரின் சகோதரனும் கனகரட்ணம் (டென்மார்க்), ரவி (கொழும்பு), செல்வராணி ஆகியோரின் மைத்துனரும் டினிராஜ் (டென்மார்க்), ஜெயருபிதா (டென்மார்க்), அமர்நாத், டினேஸ் ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (13-12-99) திங்கட்கிழமை சுவிஸில் நடைபெறும்.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்;
சு. நீதிராசா
(மைத்துனர்)

நீர்வேலி மேற்கு,
நீர்வேலி.

(71754)

## பொன்னம்பலம் தர்மகுலசேகரம்

(கிராமசேவை அலுவலர், அராலிதெற்கு)

கொக்குவில் மேற்கைப் பிறப்பிடமாகவும், வட்டுக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னம்பலம் தர்மகுலசேகரம் (கிராம சேவையாளர் அராலிதெற்கு) அவர்கள் 1999-12-12 அன்று இறைபதம் அடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னம்பலம் லக்சுமி தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற தர்மலிங்கம் பஞ்சலட்சுமி தம்பதிகளின் அன்பு மருமகனும், திருச்செல்வியின் (யாழ். வட்டு இந்துக்கல்லூரி) பிரியத்துக்குரிய கணவனும், சாரங்கன், துஷ்யந்தன் (யாழ்ப்பாணக் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், இராஜதலசேகரம் (கொழும்பு) யோகராணி, புஷ்பராணி, சந்திரகுலசேகரம், ஞானகுலசேகரம் (லண்டன்), சந்திரபவானி (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், சரவணபவானந்தன் (ஆஸ்திரேலியா), கலைச்செல்வி (கனடா), நித்தியானந்தன் (ஜேர்மனி), சிவானந்தன் (அமெரிக்கா), குகானந்தன் (கனடா) ஆகியோரின் அருமை மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13-12-99) திங்கட்கிழமை பி. ப. 1-00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வழுக்கையாறு மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்

வட்டு--கிழக்கு,
வட்டுக்கோட்டை.

(சி/10190)

# இலங்கை வெற்றி

இலங்கை — ஸிம்பாப்வே அணிகளுக்கு இடையே ஸிம்பாப்வேயில் நேற்று நடைபெற்ற இரண்டாவது சர்வதேச ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் ஸிம்பாப்வே அணியை இலங்கை அணி 13 ஓட்டங்களால் வென்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி ஆட்டநேர இறுதியில் 213 ஓட்டங்களைப் பெற்றது. ரசல் ஆர்னல்ட் சதம் அடித்தார்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய ஸிம்பாப்வே அணி 49.1 ஓவர்களில் 200 ஓட்டங்களுக்குள் சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. சனத் ஜெயசூரியா 4 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

நேற்றைய ஆட்ட நாயகனாக ரசல் ஆர்னல்ட் தெரிவு செய்யப்பட்டார்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற முதலாவது ஒருநாள் ஆட்டம் மழை காரணமாகக் கைவிடப்பட்டது குறிப்பிடத்தக்கது. [உ-8-4]

# இளைஞர்கட்கான இரு நாள் பயிற்சிப் பட்டறை

தேசிய இளைஞர் சேவைகள் மன்ற யாழ். மாவட்ட அலுவலகத்தினால் யாழ். மாவட்ட இளைஞர் கழக உறுப்பினர்களுக்கு இரு நாள் பயிற்சிப் பட்டறை இன்றும் நாளையும் கந்தர்மடம் சைவப்பிரகாச வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

யாழ். மாவட்ட இளைஞர் சேவைகள் உத்தியோகத்தர் அ. சக்திவேல் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ரி. வி. கிருஷ்ணசாமியும், சிறப்பு விருந்தினராக யாழ். தேசிய இளைஞர் சேவைகள் மன்ற உதவி இயக்குநர் தி. சிவதட்சணாமூர்த்தியும் கலந்து கொள்வர்.

இந்தப் பயிற்சிப் பட்டறையில் யாழ்ப்பாணம், நல்லூர், வேலணை, ஊர்காவற்றுறை, பளை ஆகிய பிரதேச இளைஞர்கள் கலந்து கொள்ளவுள்ளனர். இப்பயிற்சிப் பட்டறையில் யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் விரிவுரையாற்றுவர். (ஐ-180)

லிபேட்டி அச்சுவேலி
இன்று மட்டும்
முரளி – மீனா
நடித்த
வாட்டாகுடி இரணியன்
காட்சிகள்: 10-30, 2-30
T.P.No.070-212223
070-212678
(71687)

நாகம்ஸ்
சுன்னாகம்
ரஜனி, ரோஜா
நடித்த
உழைப்பாளி
காட்சிகள்:
11-00, 2-30,
(புதிய நேரம்)
(71727)

ராஜா
யாழ்ப்பாணம்
விஜய் - ஷாலினி
மற்றும் பலர் நடித்த
காதலுக்கு மரியாதை

# மட்டக்களப்பில் நேற்று இளைஞர் சுட்டுக்கொலை

மட்டக்களப்பு, டிசெ. 13

மட்டக்களப்பு நகருக்கு தமது வீட்டில் இருந்து சைக்கிளில் சென்று கொண்டிருந்த இருஇளைஞர்கள் இனந்தெரியாதவர்களால் வழிமறிக்கப்பட்டு சுடப்பட்ட சம்பவம் நேற்றுக் காலை 8.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

இந்தச் சம்பவத்தில் குருக்கள் மடத்தைச் சேர்ந்த எஸ். ஜெகதீஸ்வரன் [வயது 21] என்பவர் உயிரிழந்தார்.

ரீ.அனுராஜ் [வயது 24] என்பவர் காயமடைந்து மட்டக்களப்பு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். [க-3-21]

# மூத்த கிராம அலுவலர் காலமானார்

வலிமேற்கு, டிசெ. 13

யாழ். மாவட்ட கிராம உத்தியோகத்தர் சங்கத்தின் நீண்ட கால உறுப்பினரும் தொழிற் சங்கவாதியுமான அராலி தெற்கு கிராம உத்தியோகத்தர் பொ. தர்மகுலசேகரம் நேற்றுக் காலமானார்.

கிராம உத்தியோகத்தராக நியமனம் செய்யப்பட்ட காலத்தில் இருந்து தொடர்ச்சியாக 15 வருடங்கள் அராலி தெற்கு கிராம உத்தியோகத்தர் பிரிவில் மக்களுக்கு சிறந்த சேவையாற்றி பொதுமக்களின் பாராட்டைப் பெற்றவர் இவர். (ஐ-175)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி கமலாம்பிகை நல்லையா

காரைநகர் புதுறோட்டைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி கமலாம்பிகை நல்லையா 11-12-99 சனிக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை நல்லையாவின் (பொறியியலாளர், சிமெந்துக் கூட்டுத்தாபனம், காங்கேசன்துறை), அன்பு மனைவியும் பூபதி (ஓமான்), உருத்திரன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் விவேகானந்தராசாவின் (கணக்காளர், ஓமான்) அன்பு மாமியாரும் கௌரி (லண்டன்), விஜிதா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்

அன்னாரின் பூதவுடல் பொறளை ஜெயரட்ண மலர்ச்சாலையில் வைக்கப்பட்டு மாலை 4 மணியளவில் கனத்தை இந்து மயானத்துக்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
க. இந்திரன்

புதுறோட்,
காரைநகர்.

(71751)

## செல்லப்பா செல்லச்சாமி

யாழ்ப்பாணம் நல்லூரைப் பிறப்பிடமாகவும் வவுனியா பூமாங்குளத்தைத் தற்காலிக புகலிடமாகவும் கொண்ட செல்லப்பா செல்லச்சாமி 11-12-99 இல் காலமானார்.

இவர் காலஞ்சென்ற செல்லப்பா பூரணத்தின் அன்பு மகனும், கனகாம்பிகையின் (தேவி) அன்புக் கணவரும், றோஷன் (பிரான்ஸ்), சுகீர் (லண்டன்), சோபனா ஆகியோரின் அன்புத் தந்தையும். வேஜினி, தவத்துரை ஆகியோரின் அன்பு மாமனாரும் கந்தசாமி [லண்டன்], குமாரசாமி (சவுதி), குருசாமி (டோகா), மரியமலர் (ஜேர்மனி), கமலாம்பிகை (கனடா), பூபதி, விஜயராசா, பாலாம்பிகை ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஜனனி, வாணி ஆகியோரின் பேரனும் சிறி மகேசன், பிறவுண்ராஜ், கனகசூரியம், பாலச்சந்திரன், காலஞ்சென்ற லோறன்ஸ் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று ஞாயிற்றுக்கிழமை 2 மணிக்கு வவுனியாவில் நடைபெற்றன. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகிறோம்.

தகவல்!
செ. குமாரசாமி
(தம்பி)

39/2, சோமசுந்தரம் அவெனியூ,
சுண்டுக்குளி.

[71744]

## திருமதி கணபதிப்பிள்ளை மாணிக்கம்

மட்டுவில் வடக்கு, சாவகச்சேரியைச் சேர்ந்த திருமதி கணபதிப்பிள்ளை மாணிக்கம் காலமானார்.

இவர் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை - வள்ளிப்பிள்ளை தம்பதிகளின் அன்புப் புதல்வியும், கணபதிப்பிள்ளையின் அன்பு மனைவியும் விநாயகமூர்த்தி, பாலசுப்பிரமணியம் (H.N.B, திருகோணமலை), புனிதமலர், ஈஸ்வரன் [ஆசிரியர், மீசாலை வீரசிங்கம் ம.வி. மாணவன், டிப்ளோமா, யாழ். பல்கலைக்கழகம்] ஆகியோரின் தாயாரும், கமலாதேவி, ரோகிணிதேவி, முருகையா [சார்ஜா], தயாளினி ஆகியோரின் மாமியாரும் காலஞ்சென்றவர்களான கந்தையா, சின்னத்தம்பி மற்றும் சின்னப்பிள்ளை, காலஞ்சென்ற சின்னம்மா, கதிரேசு, காலஞ்சென்ற பருவதம் ஆகியோரின் சகோதரியும் குமுதினி, தர்ஷினி, விஜயதர்ஷினி, சுதர்ஷினி, இலக்கியப்பிரியன், கவிதாமகன் ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் தகனக்கிரியைகள் நேற்று (12-12-99) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3-00 மணியளவில் நடைபெற்றன. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்!
ஈஸ்வரன்
(மகன்)

மட்டுவில் வடக்கு,
சாவகச்சேரி.

(சி/10195)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுமக்களைப் பாதுகாக்க

# காஷ்மீர் எல்லைக் கிராமங்களில் 2 ஆயிரம் பதுங்கு குழிகள் அமைப்பு

புதுடில்லி, டிசெ. 13

பாகிஸ்தான் படையினரின் ஷெல் மற்றும் ஆட்லறித் தாக்குதல்களில் இருந்து பொது மக்களைப்பாதுகாப்பதற்காக இந்தியக் கட்டுப்பாட்டிலுள்ள ஜம்முகாஷ்மீரின் கார்கில் நகரிலும் அதன் சுற்றுப்புற கிராமங்களிலும்இந்தமாத இறுதிக்குள் சுமார் 2 ஆயிரம் பதுங்கு குழிகள் அமைக்கப்பட உள்ளன.

பொதுமக்களின் உயிர்களைப் பாதுகாப்பதற்காக இவை அமைக்கப்பட உள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

கார்கில் நகரில் மட்டும் சுமார் 100 பொதுச் சமூகப் பதுங்கு குழிகள் அமைக்கப்படும். எல்லைப்புறக் கிராமங்களில்ஆயிரத்துக்குமேற்பட்ட பதுங்கு குழிகள் அமைக்கப்படும்.

அரசு நிறுவனங்களில் பணியாற்றும் ஊழியர்களுக்கு என்று 20 பதுங்கு குழிகள் ஒதுக்கப்படும்.

இந்தத் திட்டம் மத்திய உள்துறை அமைச்சினால் நடைமுறைப்படுத்தப்பட உள்ளது.

[ஐ-6-5-8]

# லாலுவின் மகளது திருமணத்தில் மத்திய அமைச்சர்கள் பங்கேற்பு

புதுடில்லி, டிசெ. 13

பீஹார் மாநில முன்னாள் முதலமைச்சரும் ராஷ்டிரிய ஜனதா தளத் தலைவருமான லாலுபிரசாத் யாதவ்வின் மகளது திருமணத்தில் மூன்று மத்திய அமைச்சர்கள் கலந்து கொண்டுள்ளனர்.

மத்திய அமைச்சர்களான ஜோர்ஜ் பெர்ணாண்டஸ் ராம்விலாஸ் பாஸ்வான், நிதீஸ் குமார் ஆகியோரே லாலுப்பிரசாத் யாதவின் மகளான மிஷாபாரதியின் திருமண வரவேற்பில் கலந்து கொண்டனர்.

அரசியல் ரீதியில் எதிரும் புதிருமான தேசியக் கூட்டணி அமைச்சர்களும் லாலுப்பிரசாத் யாதவ்வும் ஒன்றாக இணைந்துள்ளது அரசியல் அவதானிகளை வியப்படைய வைத்துள்ளது.

[ஐ-6-5-8]

# மெக்சிக்கோவில் மாணவர் ஆர்ப்பாட்டம்

மெச்சிக்கோ சிற்றி, டிசெ 13

மெக்சிக்கோ நகரில் உள்ள அமெரிக்கத் தூதரகத்துக்கு வெளியே நூற்றுக்கணக்கான மாணவர்கள் நேற்று பெரும் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தினைத் தடுக்க முயன்ற பொலீஸாருக்கும் மாணவர்களுக்கும் இடையே மோதல் ஏற்பட்டது.

சியாற்றினில் அண்மையில் நடைபெற்ற உலக வணிக அமைப்பின் அமைச்சர் மட்ட மாநாட்டின்போது ஆர்ப்பாட்டம் செய்ததற்காகக் கைது செய்யப்பட்டவர்களை விடுவிக்குமாறு கோரியே மாணவர்கள் இந்த ஆர்ப்பாட்டத்தை நடத்தினர்.

(ஐ-6-5-8)

செச்சினிய விவகாரம்

# சமரசப்பேச்சு நடைபெறுவதை ஒட்டி ரஷ்யத் தாக்குதல் இடைநிறுத்தம்!

மொஸ்கோ, டிசெ. 13

செச்சினியாவில் ரஷ்யப் படையினர் நடத்திவரும் தாக்குதல்களை முடிவுக்குக் கொண்டு வருவதற்காக செச்சினிய பிரதமர் அஸ்லாம் மஸ்கடோவுக்கும் ரஷ்ய ஜனாதிபதி பொறிஸ் யெல்ட்சினின் பிரதிநிதிகளுக்கும் இடையில் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதனை அடுத்து தலைநகர் குறோஸ்னி மீதான ரஷ்யப் படைகளின் தாக்குதல்கள் இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

குறோஸ்னியை விட்டு பொது மக்கள் வெளியேறுவதற்கு ரஷ்யா வழங்கிய காலக்கெடு நேற்று முன்தினம் சனிக்கிழமையுடன் முடிவடைந்தது. எனினும் பொது மக்கள் வெளியேறுவதற்கான காலக்கெடுவை படையினர் உள்ளூர் நேரப்படி நேற்று நள்ளிரவு வரை நீடித்திருந்தனர்.

தலைநகரில் இருந்து பொது மக்கள் வெளியேறுவதை மேற்பார்வை செய்வதற்காக ரஷ்யாவின் விசேட பிரதிநிதி ஒருவர் செச்சினியாவின் வடக்கு காகஸஸ் மலைப் பகுதிக்கு அனுப்பப்பட்டுள்ளார்.

அதேசமயம்—

பின்லாந்தில் நடைபெறும் ஐரோப்பிய ஒன்றிய உச்சி மாநாடு செச்சினியா மீதான ரஷ்யாவின் இராணுவ நடவடிக்கைக்கு கடும் கண்டனம் தெரிவித்துள்ளது. பின்லாந்தில் உள்ள ரஷ்யத் தூதர் அழைக்கப்பட்டு அவரிடம் இந்தக் கண்டனம் நேரில் தெரிவிக்கப்பட்டது.

செச்சினியா மீதான இராணுவத்தாக்குதல்கள் உடனடியாக நிறுத்தப்படாவிட்டால் ரஷ்யா வுடனான வர்த்தக நடவடிக்கைகள் குறித்து மீள் பரிசீலனை செய்யவேண்டி இருக்கும் என்று ரஷ்யப் பிரதமர் விளாடிமிர் புடினுக்கு எழுதியுள்ள கடிதத்தில் ஐரோப்பிய ஒன்றியம் தெரிவித்துள்ளது. (ஐ-6-5-8)

உலக அரங்கில்

## பெனாசிர் மீது கொலைக் குற்றச்சாட்டு

இஸ்லாமாபாத், டிசெ. 13

பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் பெனாசிர் பூட்டோ மீது கொலைக் குற்றம் சாட்டப்பட உள்ளது.

1996 ஆம் ஆண்டு ஜூன் மாதம் இரண்டு அரசியல் தொண்டர்களைக் கொலை செய்ததாக அவர் மீது குற்றம் சுமத்தப்பட உள்ளதாக பாகிஸ்தான் இராணுவ ஆட்சியாளர்கள் தெரிவித்துள்ளனர். (ஐ-6-5-8)

# முழு நிலாக்கால இரவில் தாஜ்மஹாலைப் பார்க்கலாம்

புதுடில்லி, டிசெ. 13

உலகின் ஏழு அதிசயங்களில் ஒன்றான தாஜ் மஹால் பௌர்ணமி தின இரவுகளில் சுற்றுலாப் பயணிகளின் பார்வைக்காகத் திறந்து விடப்பட உள்ளது.

பாதுகாப்புக் காரணங்களை முன்னிட்டுக் கடந்த 15 வருடங்களாகத் தாஜ்மஹாலை இரவில் பார்வையிடுவதற்குத் தடை விதிக்கப்பட்டிருந்தது தற்போது அதனை இரவில் பார்வையிடுவதற்கு மீண்டும் சுற்றுலாப் பயணிகளை அனுமதிப்பது என்று உத்தரப் பிரதேச மாநில அரசு தீர்மானித்துள்ளது.

பௌர்ணமி தின இரவில் பார்வையிடுவதற்கும் அதற்கு முன்னர் இரு நாட்களும் பின்னர் இரு நாள்களும் இரவில் பார்வையிடுவதற்கும் சுற்றுலாப் பயணிகளை அனுமதிப்பது என மாநில சுற்றுலாத்துறை முடிவு செய்துள்ளது.

முற்று முழுதாகச் சலவைக் கற்களால்கட்டப்பட்ட தாஜ்மஹால் பௌர்ணமி தின இரவில் பார்க்கும் போது தங்க நிறத்தில் ஒளிர்வது போன்று இருக்கும்.

(ஐ 6-58-)

# பிலிப்பீன்ஸ் தீவில் சிறிய நில நடுக்கம்

மணிலா, டிசெ. 13

பிலிப்பீன்ஸ் தீவான லூசேனையும் தலைநகர் மணிலாவையும் நேற்று அதிகாலை சிறிய அளவிலான நில நடுக்கம் தாக்கி உள்ளது.

ரிச்டர் அளவுகோலில் 6.8 புள்ளியாக இந்த நிலநடுக்கம் பதிவு செய்யப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்த நிலநடுக்கத்தால் ஏற்பட்ட அதிர்வு காரணமாக மாரடைப்பு ஏற்பட்டு ஒருவர் பலியானார் என்றும்—

பலர் காயமடைந்துள்ளனர் என்றும்—

அறிவிக்கப்பட்டுள்ளது.

தலைநகர் மணிலாவில் பல கட்டடங்கள் சிறிய சேதத்திற்கு உள்ளாகி உள்ளன- மேலும் பல கட்டடங்களின் கண்ணாடிகள் உடைந்து நொருங்கி உள்ளன.

லூசேன் தீவின் சில பகுதிகளிலும் தலைநகரிலும் நில அதிர்வால் மின்சாரம் துண்டிக்கப்பட்டது இந்த நில நடுக்கத்தால் பெரும் அனர்த்தம் ஏதும் ஏற்பட்டதாகவோ கட்டடங்கள் பெரும் சேதத்திற்கு உள்ளானதாகவோ தகவல்கள் ஏதும் கிடைக்கவில்லை என்று பிலிப்பீன்ஸ் உள்துறை அமைச்சர் தெரிவித்தார்.

இதற்கு முன்னர் 1990 ஆம் ஆண்டு பிலிப்பீன்ஸில் நில நடுக்கம் ஏற்பட்டதில் ஆயிரத்துக்கும் அதிகமானோர் உயிரிழந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

(ஐ-6-5-8)

# பங்களாதேஷ் படகு விபத்தில் 125-க்கும் அதிகமானோர் பலி!

டாக்கா, டிசெ. 13

பங்களாதேஷின் மேக்னா ஆற்றில் சென்று கொண்டிருந்த படகு ஒன்று கவிழ்ந்ததில் அதில் பயணம் செய்த 125-க்கும் அதிகமானோர் கொல்லப்பட்டிருக்கலாம் என்று அஞ்சப்படுகின்றது.

அலுவலகங்கள் மற்றும் கல்லூரிகளில் இருந்து வீடுகளுக்கு திரும்பிக் கொண்டிருந்த 300 பேரை ஏற்றிக்கொண்டு பயணம் செய்த படகே கவிழ்ந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. இந்த விபத்துக்கான காரணம் என்ன என்பது குறித்து உடனடியாக அறிவிக்கப்படவில்லை.

அந்த ஆற்றில் பயணம் செய்துகொண்டிருந்த மற்றொரு படகு சுமார் 150, பயணிகளைக் காப்பாற்றியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மீட்புப் பணிகள் துரிதமாக இடம்பெற்று வருகின்றன. 25 பேரின் உடல்கள் நேற்றுப் பகல் வரை மீட்கப்பட்டன. எனினும் எஞ்சியவர்கள் உயிருடன் இருப்பதற்கான சாத்தியக் கூறுகள் காணப்படவில்லை என்று மீட்புப் பணியாளர்கள் தெரிவித்தனர்.

இந்தப் படகு விபத்துக்குறித்து பங்களாதேஷ் பிரதமர் ஷேக் ஹஸீனா ஆழ்ந்த கவலை தெரிவித்துள்ளார்.

(ஐ-6-5-8)

# போர்த்துக்கல் விமான விபத்தில் 35 பயணிகள் உயிரிழந்தனர்

லிஸ்போ, டிசெ. 13

போர்த்துக்கல் நாட்டின் அஸோரஸ் தீவில் நேற்று முன்தினம் ஏற்பட்ட விமான விபத்தில் 35 பயணிகள் உயிரிழந்தனர்.

அஸோரஸ் விமான நிலையத்தில் தரை இறங்குவதற்காக வந்து கொண்டிருந்த சமயம் விமானம் மலை ஒன்றில் மோதியதாகத் தெரிவிக்கப்பட்டது.

வெடித்துச் சிதறிய விமானத்தின் சிதைவுகள் ஆயிரம் சதுர மீற்றர் பிரதேசத்தில் சிதறிக்கிடப்பதாக மீட்புப் பணியாளர்கள் தெரிவித்தனர். நேற்றுவரை சுமார் 10 பேரின் சடலங்கள் மீட்கப்பட்டன.

கடும் பனி மூட்டம் காரணமாக விமானி விமானத்தை மலையில் மோதவிட்டிருக்கலாம் என்று விமான நிலைய அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதேவேளை —

ஐரோப்பிய ஒன்றிய உச்சி மாநாட்டில் கலந்து கொள்ளச் சென்ற போத்துக்கல் பிரதமர் விமான விபத்து இடம்பெற்ற செய்தியை அறிந்ததும்உடனடியாக நாடு திரும்பினார். அஸோரஸ் தீவுக்கு விஜயம் செய்து விபத்து இடம்பெற்ற பகுதியை நேரில் பார்வையிட்டார். விபத்துக்கான காரணங்கள் குறித்து அதிகாரிகளுடன் கலந்துரையாடினார்.

போர்த்துக்கல் நாட்டின் வரலாற்றில் இடம்பெற்ற மிக மோசமான விமான விபத்தும் 1989 ஆம் ஆண்டு இப்பகுதியிலேயே இடம்பெற்றது அந்த விபத்தில் 149 பேர் உயிரிழந்தனர்.

(ஐ-6-5-8)

ஆயுத இரகசியங்களைத் திருடினார்:

# தாய்லாந்து விஞ்ஞானி அமெரிக்காவில் கைது!

அமெரிக்க சமஷ்டிப் புலனாய்வுத்துறை [எவ் பி ஐ] அதிகாரிகள் ஆயுத இரகசியங்கள் தொடர்பான தகவல்கள் கடத்தப்பட்டது தொடர்பாக விஞ்ஞானி ஒருவரைக் கைது செய்துள்ளனர்.

அமெரிக்க ஆயுத ஆராய்ச்சிக்கூடம் ஒன்றில் பணியாற்றி வந்த தாய்லாந்தின் கணனித்துறை விஞ்ஞானியான வென் கூலி என்பவரே கைது செய்யப்பட்டுள்ளவராவார்.

அந்த ஆயுதக் கூடத்தில் இருந்து கணனிகளில் பாதுகாக்கப்பட்டிருந்த ஆயுத தயாரிப்பு இரகசியங்களைத் திருடியதாக இவர் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது

அண்மையில் அமெரிக்காவில் இருந்து அணு ஆயுதத் தயாரிப்பு தொடர்பான விவரங்களை சீனா திருடியதாக எழுந்த குற்றச்சாட்டிலும் இவர் சம்பந்தப்பட்டிருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது

1 ?

(சி/10183)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

**தவறிவிட்டது**

செல்லையா மொனிக்கா ஆகிய எனது விசேட அடையாள அட்டை (0901024014) மனோகரா தியேட்டருக்கும் யாழ். நகருக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து 52/5, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்றமுகவரியில் ஒப்படைத்து உதவவும். (71739)

**காணி விற்பனைக்கு**

கச்சேரிக்கு அருகில பழைய புகையிரத நிலைய தரிப்பிடத்திற்கு முன்பாக 2 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. தொடர்புகொள்ள வேண்டிய முகவரி: G S Victor, 27, Mathew, Rood, Jaffna (71731)

**தேவை**

சேவிஸ் ரேசன் வேலைக்கு ஆள்கள் உடன் தேவை. பரஸ்கோ ஹாப்பிறிகேசன் சேவிஸ் முத்திரைச்சந்தை நல்லூர். (71733)

**MATHS 2000**

4 ஆம் தரத்திலிருந்து O/L வரை 35 வருட அனுபவமுடைய ஆசிரியரினால் ஆரம்ப அறிவிலிருந்து முன் ஆண்டுகளில் தெரியாத அலகுகளையும் முதலாம் தவணைக்குரிய சகல அலகுகளையும் 40 மணித்தியாலங்களில் உயர்ந்த பெறுபேறடையக் கற்பிக்கப்படும் க. ஆறுமுகநாதன், 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, சுண்டுக்குளி (71704)

**SPOKEN ENGLISH**

சுலபமான முறையில் இலக்கணம் இன்றி குறுகிய காலத்தில் ஆங்கிலத்தில் கதைக்கப் பயில ஆசிரியர் ந. விக்கினேஸ்வரன் ஆச்சாரி 426 (302), காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (மாணவர்கள் பதிவுகள் திங்கள், வியாழன், சனி, ஞாயிறு) (71732)

**விற்பனைக்கு**

லெமினேற்றிங் I C கவர் 65x95 250 Micron விற்பனைக்குண்டு திரு. சாருஜன் கே. கே. எஸ். வீதி, கொக்குவில். [71721]

**ஒத்துமாறல்**

வடக்கு — கிழக்கு மாகாண சபை எழுதுநர் சேவையின் கீழ் அண்மையில் தென்மராட்சி கல்வி வலயத்திற்கு நியமனம் பெற்றவர் யாழ்ப்பாணம் அல்லது கோப்பாய் கல்வி வலயத்துக்கு ஒத்துமாற விரும்புகின்றார். தொடர்பு: இல. 57, பலாலி வீதி, கந்தர்மடம். [71741]

## வீதி சேதம்

அச்சுவேலி தெற்கு முழக்கன் மயானத்திற்கு செல்லும் வீதி பயன்படுத்த முடியாத அளவு சேதமடைந்திருப்பதாக பொதுமக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

அச்சுவேலி தென்பகுதி மக்களின் பயன் பாட்டிற்குரிய ஒரேயொரு மயானம் முழக்கன் மயானம் ஆகும். மயானத்திற்கு செல்லும் வீதி நீண்டகாலமாகசேதமடைந்த நிலையில் காணப்படுகின்றது. (ஐ-11)

---

# ஜெசித்தாராவின் விசேட சலுகை

எமது உணவுப் பெட்டிகள் அதாவது புரியாணி, பிரைட்றைஸ், நூடில்ஸ், லம்பாரிஸ் போன்றவற்றை வாங்குபவர்களுக்கு 11 - 12 - 99 முதல் 10-01-2000 வரை ஒவ்வொரு உணவுப் பெட்டியுடனும் அமெரிக்கன் ஸ்டிக்கர்கள் இனாம்! இச்சலுகை கையிருப்பு முடியும்வரை மட்டுமே. முந்துங்கள்! முந்துங்கள்!

ஜோ. எகட்டனின் 'ஜெசித்தாரா
(சுண்டுக்குளி மகளிர் கல்லூரி முன்ஒழுங்கை)
சுண்டுக்குளி,
'2000 யுகத்தில் புது உருவம் ஜெசித்தாரா'
(சி/10170)

---

# லைடனின் மலிவு விற்பனை

லைடன் வாடிக்கையாளர் நன்மை கருதி

**25 - 11 - 99 முதல்**

**நத்தார்-புதுவருட**

மலிவு விற்பனையை ஆரம்பித்துள்ளோம் என்பதை வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம்.

எமது புடைவை நிலையத்தில் வாங்கும் ஒவ்வொரு புடைவைத் தினிசுகளுக்கும் விசேட கழிவு வழங்கப்படும்.

**லைடன் புடைவை நிலையம்**

410, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்
T.P — 2381
(சி/9806)

---

# வீரசிங்க மண்டப வேலைகளுக்கான கேள்விக்கூறு

வீரசிங்க மண்டபத்திற்கு பின்வரும் வேலைகளைச் செய்வதற்கான கேள்விக் கூறுகள் கோரப்படுகின்றன. சபையில் விவரங்களையும், வேலைகளையும் பார்வையிட்டு 16 - 12 - 99- ற்கு முன் விண்ணப்பிக்கவும்.

1. மண்டப உட்பகுதிக்கு ஸ்பிறேயர் மூலம் (Spray Paint - Emulsion) வர்ணம் அடிப்பதற்கும்
2. அலுமினிய எழுத்துச் செய்து மண்டபப் பெயர் பொறிப்பதற்கும்,
3. மண்டப மேடைக்குத் தேவையான தேக்குமரம் வழங்குவதற்கும்.

மாவட்டச் செயலாளர்,
யாழ். மாவட்டக் கூட்டுறவுச் சபை.

14. மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.
(சி - 10190)

---

# கண்ணீர் அஞ்சலி

எமது பன்னாலை கணேச சனசமூக நிலையத்தின் தர்மகர்த்தா சபைஉறுப்பினராகவும், போஷகராகவும் இருந்து பல வருடங்களாக எம்மை வழி நடத்தி வந்த

அமரர்

**வேலாயுதர் சண்முகம்**

அவர்கள் இறையடி சேர்ந்தார் என்ற செய்தி கேட்டு ஆழ்ந்த துயர் அடைந்ததுடன் அவரது குடும்பத்தினருக்கு எமது அனுதாபத்தைத் தெரிவித்தும் அன்னாரது ஆன்மா சாந்தியடைய எல்லாம் வல்ல எம் பெருமானைப் பிரார்த்திக்கின்றோம்.

நிர்வாக சபை
கணேச சனசமூக நிலையம்,
பன்னாலை, தெல்லிப்பழை.

(71742)

---

# குடிதண்ணீர் விநியோகம் நெடுந்தீவில் ஸ்தம்பிதம்

## பிரதான குழாயில் வெடிப்பு

நெடுந்திவு, டிசெ 13

நெடுந்தீவில் குடிதண்ணீர் விநியோகச் சேவைசீர்குலைந்ததை அடுத்து பொதுமக்கள் குறிப்பாக மத்திய கிழக்குப் பகுதி மக்கள் பெரிதும் பாதிப்படைந்துள்ளனர்.

மேற்கு காராப்பிட்டியில் இருந்து வரும் பிரதான விநியோகக் குழாயில் ஏற்பட்ட வெடிப்புக் காரணமாகவே குடிதண்ணீர் விநியோகச் சேவை ஸ்தம்பிதமடைந்துள்ளது.

1964 ஆம் ஆண்டில் மேற்படி குழாய்கள் நிலத்தின் கீழ் பொருத்தப்பட்டன கடந்த ஆண்டில் ஜேர்மன் தொழில் நுட்பநிறுவனம்நெடுந்தீவுகுடிதண்ணீர் விநியோகத் திட்டத்தைப் புனரமைத்துக் கொடுத்தது. எனினும் பிரதான விநியோகக் குழாய்கள் மாற்றப்படவில்லை. கடந்த 25 வருடங்களாக பிரதான விநியோகக் குழாயில் அடிக்கடி வெடிப்புகள் ஏற்படுவது வழக்கம் என பிரதேச சபையினர் தெரிவித்தனர். (ஐ-111)

---

# தேவை

நோயாளர் பாவிக்கும் சக்கர நாற்காலி (Wheelchair) உடனடியாகத் தேவைப்படுகின்றது.

தொடர்புகொள்ளவும்:
பொ. நடேசன்
இராஜேஸ்வரி
வணிக நிலையம்.
இல 6, பஸ் நிலையம்,
சாவகச்சேரி.
தொலைபேசி எண்
070 -- 212264
[71748]

---

# சக்தி

**கல்வி நிலையம்**

புகையிரத நிலைய வீதி,
சுன்னாகம்.

**A/L 2000**

- கிரயக் கணக்கீடு
- கம்பனி

B. முகுந்தன்
ஆரம்பம்: 13-12-99
(சி/10191)

---

ஸ்ரீஜெய நீராவியடி

# விரகத்தி விநாயகர் ஆலயம்

மேற்படி ஆலயத்தில் தற்போது நடைபெற்று வரும் விநாயகர் விரத (பெருங்கதை) பூர்த்தி இன்று திங்கட்கிழமை இடம்பெற உள்ளது.

தினமும் ருத்ரகும்ப அபிஷேகம், பூசை, பஞ்சமுக அர்ச்சனை விநாயக புராணப் படிப்பு என்பன நடைபெற்றன.

இன்று 13-12-99 திங்கட்கிழமை காலை 8 மணி தொடக்கம் கணபதிஹோமம் நடைபெற்று விநாயகப் பெருமானுக்கு 11 மணிக்கு 108 கலச அபிஷேகம் நடைபெறத் திருவருள் கூடியிருப்பதால் அடியார்கள் வந்து பெருமானைத் தரிசித்து இஷ்ட சித்திகளைப் பெற்றுய்யும் வண்ணம் கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்ந்து பெருங்கதைப்படிப்பும் விநாயகப் பெருமான் வீதியுலாவும் நடைபெறும்.

பரம்பரை நம்பிக்கைப்
பொறுப்பாளர்.

ஸ்ரீஜெயநீராவி.
வீரகத்தி விநாயகர் ஆலயம்,
39, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம். [71746]

---

# கண்ணீர் அஞ்சலி

**பொ. தர்மகுலசேகரம்**

(கிராம உத்தியோகத்தர், அராலி தெற்கு)

எமது சக உத்தியோகத்தர் பொ. தர்மகுலசேகரத்தின் மறைவு எம்மால் தாங்கமுடியாமல் இருக்கின்றது. 15 வருடகாலமாக தொடர்ச்சியாக எம்முடன் சகல நடவடிக்கைகளிலும் பங்குகொண்டவர்; அராலி தெற்கு மக்களுக்கு அயராது சேவையாற்றியவர்; அன்னாரின் பிரிவால் துயருறும் மனைவி, மக்கள். உறவினர்கள், நண்பர்கள் மற்றும் அனைவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

கிராம உத்தியோகத்தர்கள்.

வலி. மேற்கு பிரதேச செயலகம்,
சங்கானை.
(சி/10194)


---



# அன்பிற்கினிய மக்களே!

இனப்பிரச்சினைத் தீர்வு விடயத்தில் அழுத்தம் கொடுப்பதற்காகவும் அதற்காக ஈ. பி. டி. பி. யின் பேரம் பேசும் சக்தியை அதிகரிக்கவும் வாக்களிப்பீர் சந்திரிகாவிற்கு.

**ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி**
( ஈ. பி. டி. பி. )



**1**

[71743]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அச்சுவேலி கைத்தொழிற் பேட்டை

# காணியில் சட்டவிரோத மண் அகழ்வு

அச்சுவேலி, டிசெ. 13

அச்சுவேலி கைத்தொழிற் பேட்டை அமைந்திருந்த காணியில் இருந்து பெருமளவில் கல், மண், என்பன அகழ்ந்து எடுக்கப்படுவதாக பொதுமக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

அச்சுவேலி மேற்கு கிராம சேவையாளர் பிரிவில் அமைந்துள்ள கைத்தொழிற் பேட்டைக்குரிய காணியிலிருந்தே மண், கல் என்பன பெருமளவில் அகழ்ந்து எடுக்கப்படுகின்றன. இதனைத் தடுத்து நிறுத்துவதற்கு இதுவரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது

கைத்தொழிற் பேட்டையின் பொறியிலாளர் விடுதி அமைத்திருந்த காணியில் மட்டும் 4 பரப்பு விஸ்தீரணம் உள்ள நிலம் 6 அடி ஆழத்திற்கு அகழப்பட்டு பெரும் பள்ளமாகக் காணப்படுகின்றது.

35 - க்கும் மேற்பட்ட தொழிற்சாலைகள் இயங்கி வந்த அச்சுவேலி கைத்தொழிற் பேட்டை 1990 ஆம் ஆண்டின் பின் ஸ்தம்பிதம் அடைந்ததை அடுத்து அங்கிருந்த தொழிற்சாலைக் கட்டடங்கள் அழிக்கப்பட்டன.

தற்பொழுது தொழிற்சாலைகளின் அடித்தளங்கள் மட்டும் தரைமட்டத்தில் காணப்படுகின்றன.

தொழிற்சாலைகள் அமைந்திருந்த நிலப்பரப்பு தற்போது பற்றை மூடிய புதராகக் காணப்படுவதால் சட்டவிரோதமாக மண், கல் என்பன அகழ்ந்தெடுக்கப்பட்டு வருகின்றன.

(ஐ-11-180)

## பட்டதாரிப் பயிலுநர் ஆசிரியர்:

# ஒரு வருட சேவையை முடித்த 82 பேருக்கு நிரந்தர நியமனம்

வலிகாமம் தெற்கு, டிசெ. 13

பல்கலைக்கழக பட்டம் பெற்று, பட்டதாரி பயிலுநர் ஆசிரியர்களாக நியமனம் செய்யப்பட்டு ஒருவருடகால சேவையைப் பூர்த்தி செய்து கொண்டுள்ள வலிகாமம் கல்விவலயத்தைச் சேர்ந்த 82 ஆசிரியர்களுக்கு நிரந்தர ஆசிரிய நியமனக் கடிதங்கள் வழங்கப்பட்டுள்ளன.

எதிர்வரும் ஜனவரி 3 ஆம் திகதியில் இருந்து செயற்படும்படியாக இந்நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

மேற்படி ஆசிரியர்கள் தமது சேவையை உறுதி செய்து, சுயவிவரக் கோவையைப் பூர்த்தி செய்து கொள்வதற்கான ஆவணங்களும் அவர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளன.

இதேவேளை —

புதிதாக இவ்வலயத்தைச் சேர்ந்தஏழு பட்டதாரிபயிலுநர் ஆசிரியர்களுக்கு அடுத்த வாரத்தில் நியமனக் கடிதங்கள் வழங்கப்பட உள்ளன.

இலங்கை ஆசிரிய சேவையின் தரம் 3 - I இல் இருந்து தரம் 2 - II-க்கு பதவியுயர்வு பெறுவதற்கு தகுதியுடைய ஆசிரியர்களின் விண்ணப்பங்கள் கல்வித் திணைக்களத்தால் பரிசீலிக்கப்பட்டு அவர்களில் வலிகாமம் கல்விவலயத்தைச் சேர்ந்த 38 ஆசிரியர்களுக்கு தரம் 3 - I இல் இருந்து தரம் 2 - II க்கு உள்ளீர்ப்புச் செய்யப்படடதற்கான நியமனக் கடிதங்களும் வழங்கப்பட்டுள்ளன (ஐ-152)

## தராசுப் படிகளுக்குப் பதிலாக சைக்கிள் அச்சு

அச்சுவேலி, டிசெ. 13

அச்சுவேலிச் சந்தையில் சட்டரீதியான நிறுத்தல் படிகளுக்குப் பதிலாக வேறு பொருள்கள் பயன்படுத்தப்படுவதாக பொதுமக்கள் பலரும் தெரிவிக்கின்றனர்.

படிகளுக்குப் பதிலாக சைக்கிள்நடு அச்சு, தேயிலைப்பைக் கட், தேசிக்காய், கல் போன்ற பொருள்களை சந்தையில் உள்ள வியாபாரிகள் உபயோகிப்பதாகத் தெரிவிக்கப்பட்டது (ஐ-11-180)

## சிறைச்சாலையில் கைதி காயம்

யாழ்ப்பாணம், டிசெ. 13

யாழ்ப்பாணம் சிறைச்சாலைக் கூரையில் இருந்து விழுந்து கைதி ஒருவர் தலையில் காயமடைந்தார்.

கடந்த வெள்ளி காலை இடம்பெற்ற இச்சம்பவத்தில் கடந்த ஒரு வருடகாலமாக சிறைவாசம் அனுபவித்து வரும் நல்லூர்ப் பகுதியைச் சேர்ந்த கே. பாஸ்கரன் (வயது 34) என்ற கைதியே காயமடைந்தவராவார். இவர் யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இவர் ஒரு மனநோயாளி எனத் தெரியவருகிறது.

[ஐ-15]

## விலை உயர்வு

யாழ் குடாநாட்டில் மரக்கறிவகைகளின் விலைகள் அதிகரித்துள்ளன

மழை வெள்ளம் காரணமாக பயிர்கள் பாதிக்கப்பட்டிருப்பதே மரக்கறி வகைகளின் விலை உயர்வுக்கு காரணம் என்று தெரிவிக்கப்பட்டது.

தற்போது சகல மரக்கறி வகைகளும் கிலோ 60 ரூபாவுக்கு மேலேயே விற்கப்படுகின்றன. ஐ-17

## கொக்குவில் மேற்கில்

# திருட்டுக்களைத் தடுக்க விழிப்புக் குழு காவல்!

யாழ்ப்பாணம், டிசெ. 13

கொக்குவில் மேற்குப் பகுதியில் திருட்டுக்களைத் தடுப்பதற்காக விழிப்புக் குழுவினர் இரவில் காவல் கடமையில் ஈடுபட்டு வருகின்றனர். இப்பகுதியில் தொடர்ந்து இடம்பெற்ற பல திருட்டுக்களை அடுத்து அவற்றைத் தடுக்கும் நோக்குடன் அப்பகுதி மக்கள் இணைந்து இந்த விழிப்புக் குழுவை அமைத்துள்ளனர்.

கிராம அலுவலரின் உதவியுடன் அப்பிரிவு படையினரின் அனுமதி பெற்று இந்த விழிப்புக்குழு செயற்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

இவ் விழிப்புக் குழுவில் இடம்பெறும் இளைஞர்கள் இரவு வேளைகளில் காவல் கடமையில் ஈடுபடுகின்றனர். [ஐ-15-9]

# ஜி. சீ. ஈ. விடைத்தாள் மதிப்பீடு ஜனவரி 4 முதல் ஆரம்பம்

வலிகாமம், தெற்கு டிசெ. 13

தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கும் ஜி. சீ. ஈ. சாதாரண தரப் பரீட்சைகளின் விடைத்தாள் மதிப்பீட்டுப்பணி ஜனவரி மாதம்4 ஆம் திகதியில் இருந்து 13 ஆம் திகதி வரை இடம்பெற இருக்கின்றது.

மேற்படி மதிப்பீட்டு பணிகளில் கடமையாற்ற இருக்கும் பிரதம பரீட்சகர்கள், உதவிப் பரீட்சகர்களுக்கான நியமனக் கடிதங்கள் பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் சம்பந்தப்பட்டவர்களுக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணத்தில் வேம்படி உயர்தர மகளிர் கல்லூரியில் மதிப்பீட்டுப்பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளன.

பிரதம பரீட்சகர்களுக்கான அறிவுறுத்தல் கூட்டம் இம்மாதம் 28, 29 ஆம் திகதிகளில் கொழும்பில் நடைபெற உள்ளன.

(ஐ-152)


முடிவிலா இன்பத்தில் மூழ்கித் திளைத்திடும்

எம் அன்புத் தெய்வத்தின்

## ஈராண்டு நினைவஞ்சலி



மண்ணில் 30 — 07 — 1951

விண்ணில் 04 — 01 — 1998

திருமதி

## கமலபாரதி சரவணமுத்து

உறுதியான அமைதி உணர்வுடன் நேசமான உறவு முறைகளை நாடித் தியானத்திலே ஆழ்கின்ற வேளைகளிலெல்லாம் எம்முள்ளே நின்று எமக்கு ஊக்கத்தையும் மன உறுதியையும் வழங்கிக் காவல் காத்திடும் தாரமாய்த் தாயாகி நெஞ்சங்களிலே நிலைத்து விட்டாய் தெய்வமே! உனக்கு எம் இதய அஞ்சலிகள்

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

என்றும் மறவாத
கணவன், பிள்ளைகள்.

இல. 18, செம்மணி வீதி,
நல்லூர்.

[71718]



## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்

### சுவக்கீன் அன்ரனி லாசறஸ்

தோற்றம் 23 10 -1934

மறைவு 13-12-1998

எமது வசந்தபுரம் கிராமத்தின் தோற்றத்திற்கு வித்திட்டவரும் கிராம மக்களின்பல்துறைசார் வளர்ச்சிக்கு அயராது உழைத்தவருமான அமரர் சுவக்கீன் அன்ரனி லாசறஸ் அவர்களுக்கு எமது முதலாம்ஆண்டு நினைவஞ்சலியைச் செலுத்துகின்றோம்.

இன்று (13 - 12 - 1999) பிற்பகல் 3. 00 மணிக்குப் போயிட்டி இளவாலையில் உள்ள பாரதி மன்பள்ளியில் அஞ்சலி நிகழ்வு நடைபெறும். அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பாரதி சனசமூக நிலையம்,
வசந்தபுரம், இளவாலை.

(71738)



## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



மலர்வு 13 — 02 — 1974

உதிர்வு 13 — 11 — 1999

செல்வி

### மடுத்தீனுப்பிள்ளை மேரி யசிந்தா

அன்பின் சிகரமாய் பாசத்தின் ஊற்றாய்
பாரினில் அவதரித்த பாசமிகு யசிந்தாவே!
இலட்சியப்பாதையில் நீயும் குதித்து
ஏழாண்டுகள் ஆனதோ?
இறுதிக்காலமெல்லாம் உம்முடன் மகிழ்ந்து
வாழ நாம் கனவு கண்டிருந்தோம்.
நாம் உம்மைக் காணமுன் ஆண்டவன்
அழைத்தானே!
அண்ணன் உமை அழைத்து மாதம் ஒன்றானதே ...
உன் ஆன்ம சாந்திக்காக இறையருள் வேண்டும்

பெற்றோர், சகோதரர்,
சகோதரிகள், மைத்துனர்,
மைத்துனிகள், மருமக்கள்,
சிறியமக்கள்.

4 ஆம் வட்டாரம்,
எழுவை தீவு.

(71740)



## விற்பனைக்கு உண்டு

எங்களிடம்:

‘சாப் 1118, 1020’ போட்டோ கொப்பி மெசின்கள்

இதற்குரிய ரோலர் வகைகள் விற்பனைக்குள்ளன.

மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

வியாபாரிகளுக்கு விசேட கழிவு வழங்கப்படும்.

ஏக விநியோகஸ்தர்கள்:

ஜெயகிருஷ்ணா ரேடர்ஸ்
240, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
T. P. 2837

குமரன் ரேடர்ஸ்
119, கண்டி வீதி,
சாவகச்சேரி.
070 — 212245
070 — 212318

(71685)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மானிப்பாய் கோவில்பற்று பல நோக்கு கூட்டுறவுச் சங்கம் (வ/து)

# முக்கிய அறிவித்தல்

மின் பாவனையாளர்களின் நலன்கருதி சங்க கிராமிய வங்கியில் மின்கட்டணங்களைச் செலுத்த ஏற்ற ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளது. இத்தேவைக்கும் எமது கிராமியவங்கியுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

பொது முகாமையாளர்
மானிப்பாய் ப. நோ. கூட்டுறவுச் சங்கம்

[சி/10179]

## நூல் அறிமுக விழா

திருநெல்வேலி, டிசெ. 13


யாழ். இலக்கிய வட்டம் நடத்தும் சு. வேலுப்பிள்ளை (சு. வே) எழுதிய 'மணற் கோவில்' (உருவகக்கதைகள்) நூலின் அறிமுக விழா எதிர் வரும் 19 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு யாழ். ஆரியகுளத்தடியில் உள்ள தமிழ் எழுத்தாளர் ஒன்றிய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கலாநிதி க. குணராசா (செங்கை ஆழியான்) தலைமையில் நடைபெறவுள்ள இவ் விழாவில் வரவேற்புரையை கலைப் பேரரசு ஏ. ரி. பொன்னுத்துரையும், வெளியீட்டுரையை சிற்பி சரவணபவனும், நிகழ்த்துவார்கள். மதிப்புரையை கலாநிதி எஸ். சிவலிங்கராசா, செம்பியன் செல்வன் ஆகியோர் நிகழ்த்துவர்.

(ஐ-135)

வாங்கி விட்டீர்களா?
புத்தாயிரம் (2000) வருடத்திற்குரிய
திருக்கணித பஞ்சாங்க மாதக் கலண்டர்
விலை ரூபா 50.00 மட்டுமே
புத்தாயிரம் வருடத்திற்கு அன்பளிப்புச் செய்ய விரும்பும் ஸ்தாபனங்களுக்கு ஷீ கலண்டரை மலிவு விலையில் முகவரி அச்சிட்டு வழங்குகிறோம்.
விபரங்கட்கு:
திருக்கணித நிலையம்,
மட்டுவில், சாவகச்சேரி.
(சி/10181)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில் 14 – 03 – 1925

விண்ணில் 25 – 11 – 1998

### அமரர் சுப்பர் ஐயாத்துரை

திதி: 13—12—1999

திங்கள் பன்னிரண்டு சென்றதையா
உங்கள் அன்புத் திருமுகம் கண்டு.
எங்கள் ஐயாவே! எம் குல விளக்கே!
ஆண்டு பல சென்றாலும் ஆறாது உம் நினைவு.

உங்கள் பிரிவால் துயருறும்:
மனைவி, மக்கள்.

மீசாலை வடக்கு,
கொடிகாமம்,

[71468]



SAVE ELECTRICITY

IDEAL FOR STUDENTS & INDIVIDUAL USE
LANKA NIPPON
No. 18 Keyzer Street, Colombo 11
Tel: 437735 Fax: 437736
No.10, Trelawny Place,(Behind Milk Bar),Bambalapitiya Junction,
Colombo 4. Tel.589992
[சி/9858]

## ஓராண்டு நினைவஞ்சலி



மலர்வு 22 – 12 – 1981

உதிர்வு 24 – 11 – 1998

செல்வி

### தர்ஷிகா செல்வரத்தினம்

(யா/ஆவரங்கால் நடராசா இராமலிங்கம் வித்தியாலய மாணவி)

திதி: 13 – 12 – 1999

அப்பாவைத் தேடி அவசரமாய்ப் போய்விட்ட
அன்பான கண்மணியே!
கண்ணீர்க் கனவுகளின் காலமெல்லாம் உனைக்கண்டு
கவலை அடைகிறோம்.
எப்போதும் உனக்காக இறைவனையே வேண்டுகிறோம்
இதயத்தின் பொன்மலரே!
இறைபதத்தில் எந்நாளும் இனிமையுடன் இருந்திடுக.
என்றென்றும் சாந்தி! சாந்தி!!

உனது பிரிவால் துயருறும்
அம்மா, அக்காமார்,
தம்பி, தங்கை மற்றும்
உற்றார், உறவினர்கள்.

ஷோபிதாஸ் ஸ்ரோர்ஸ்,
ஆவரங்கால்.

(71723)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

### இரத்தினேஸ்வரி இராசரத்தினம்

அன்னை மடியில் 1939 – 02 – 05

ஆண்டவன் திருவடியில் 1998 – 11 – 24

திதி: அபரபட்சம் சஷ்டி 13 - 12 – 1999

எங்கள் குடும்பத்தின் ஒளி விளக்காய், அன்பின் திருவுருவாய். பண்பின் பிறப்பிடமாய், பாசத்தின் பாசறையாய், நேர்மையின் நிறைகுடமாய்த் திகழ்ந்து அனைவருக்கும் நல்வழிகாட்டி வந்த எங்கள் அன்புத் தெய்வமே! நீங்கள் எம்மைவிட்டுப் பிரிந்து ஆண்டு ஒன்று ஆயிடினும் உங்கள் நினைவுகள் எமை விட்டுப் பிரியாது.

உங்கள் பாதக் கமலங்களில் எங்கள் சிரம்தாழ்த்தி, கரங்கூப்பி வணங்கும் இன்றைய தினத்தில் உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல சித்திரவேலாயுத பெருமானை வேண்டுகின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்
கணவன், மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

அச்சுவேலி வடக்கு,
அச்சுவேலி.

(71713)

## அவசர
# அரசாங்க கேள்வி அறிவித்தல்
## பால் தவிர்ந்த உலர் உணவு வழங்கல் 2000

சுகாதார சேவைகள் பிரிவு – யாழ்ப்பாணம்.

2000 ஆண்டில் யாழ்ப்பாணம் சுகாதார சேவைகள் பிரிவிலுள்ள கீழ்வரும் வைத்தியசாலைகளுக்கு பால் தவிர்ந்த உலர் உணவு வழங்குவதற்கான கேள்விகள் 1999 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 28 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.30 மணி வரை ஏற்றுக்கொள்ளப்பட்டு உடன் திறக்கப்படும். கேள்விப் பத்திரங்களைப் பெற விரும்புவோர் தமது பெறுமதிச் சான்றிதழும் (Worth Report), எம்மால் குறிப்பிடப்படும் தொகைக்கு ஏற்ப கேள்விப் பிணையும் (Bid Bond) சமர்ப்பித்து கேள்விப்பத்திரப் பணமாக ரூ. 50 உம், மீளளிப்புடனான கேள்விக் கட்டுப்பணமாக ரூபா 250உம் செலுத்தி, 27 - 12 - 1999 மு. ப. 12.00 மணி வரை இப்பணிமனையில் பெற்றுக்கொள்ளலாம்.

முழு விவரங்களையும் பணிமனையில் அலுவலக நாட்களில் பார்வையிடலாம்.

| | | | கேள்விப் பிணை Bid Bond | பெறுமதிச சான்றிதழ் Worth Report |
|---|---|---|---|---|
| 01. | ஆ. வை., | பருத்தித்துறை | 100,000 | 20,000 |
| 02. | மா. வை., | தெல்லிப்பழை | 100,000 | 20,000 |
| 03. | மா. வை., | சாவகச்சேரி | 80,000 | 20,000 |
| 04. | மா. வை., | வல்வெட்டித்துறை | 65,000 | 20,000 |
| 05. | சுற்றயல்கூறு, | சங்கானை | 55,000 | 15,000 |
| 06 | சுற்றயல்கூறு, | பளை | 50,000 | 15,000 |
| 07. | சுற்றயல்கூறு, | கோப்பாய் | 35,000 | 15,000 |

வைத்திய கலாநிதி க. தா. சிவபாதம்,
பதில் மாகாண பிரதிப் பணிப்பாளர்,
சுகாதார சேவைகள், யாழ்ப்பாணம்.

47, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.

(சி/10176)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

## தீர்மானங்கள் நடைமுறையாகுமா?

தெற்கில் உள்ள சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள ஐநூறுக்கும் மேற்பட்ட தமிழ்க் கைதிகள் தொடர்பான விசாரணைகளைத் துரிதப்படுத்த முடிவு செய்யப்பட்டிருக்கின்றது.

கொழும்பில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற விசேட மாநாடு ஒன்றில் விசாரணைகளைத் துரிதப்படுத்தவும், குற்றமற்றவர்களை விடுவிக்கவும் கால எல்லை நிர்ணயிக்கப்பட்டிருக்கின்றது.

இந்த முடிவுகள் சொல்லப்பட்டவாறு நடைமுறைப்படுத்தப்படுமாயின் 500 பேருக்கும் மேற்பட்ட தமிழ் இளைஞர்களின் நீண்டகாலப் பிரச்சினை தீர வழிபிறக்கும்.

சுமார் ஐந்து வருடங்களுக்கு முன்னர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட இளைஞர்கள் கூட? விசாரணையும் இன்றி வழக்குத் தாக்குதலும் இன்றி சிறைக்கூடங்களில் வாழ்க்கையில் விரக்தியும் வெறுப்பும் அடைந்த நிலையில் தமது நாள்களை நகர்த்தி வருகின்றனர்.

தம்மை நீதிமன்றில் விசாரணை செய்யவேண்டும்; இல்லையேல் விடுதலை செய்ய வேண்டும் எனக்கோரி தென்னிலங்கைச் சிறைகளில் உள்ள தமிழ் இளைஞர்கள் எத்தனையோ தடவைகள் உண்ணாவிரதம் இருந்து விட்டனர். அரசியல்வாதிகள், அதிகாரிகள் தரப்புகளில் இருந்து உடனடியாக நடவடிக்கை மேற்கொண்டு விசாரணை அல்லது விடுதலை நடைபெறும் என்று அவ்வப்போது உறுதிமொழிகள் வழங்கப்பட்டனவே அன்றி எதுவும் உருப்படியாக நடைபெறவில்லை. அவர்களுக்கு எவ்வகை விமோசனமும் கிடைக்கவில்லை. இன்னமும் சிறைக் கைதிகளாகவே வாடுகின்றனர்

களுத்துறை, கண்டி, நீர்கொழும்பு ஆகிய சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் இளைஞர்கள் தொடர்பான விசாரணைகளை ஜனவரி 31 ஆம் திகதிக்கு முன்னர் முடிக்க வேண்டும். குற்றம் இழைக்காதவர்களைப் பெப்ரவரிமாத முடிவுக்குள் விடுவிக்க வேண்டும். குற்றம் செய்தவர்கள் எனக் கருதப்படுவோர் மீது வழக்குத் தாக்கல் செய்யப்படவேண்டும் என்று விசேட மாநாட்டில் எடுக்கப்பட்ட முடிவுகளாவது செயலுருவம் பெறவேண்டும்.

பயங்கரவாதத் தடைச்சட்டம், அவசரகாலச் சட்டம் ஆகியன மனித உரிமைகளை மதிக்காத கொடிய சட்டங்கள். அவற்றை ஆயுதமாகப் பயன்படுத்தி ஆயுதப்படையினர் கைது செய்தோரின் நிலைமை இவ்வாறு நிர்க்கதிஆக்கப்பட்டிருப்பது வஞ்சம் தீர்த்தல் அன்றி வேறில்லை.

சட்டத்தைக் காட்டி, சந்தேக நபர்கள் என்று முத்திரை குத்தி, சிறையில் இடப்பட்டவர்களுக்கு நீதி வழங்கப்படாமலிருப்பது மனித தர்மத்துக்கு எல்லா வகைகளிலும் முரணானதாகும். இந்த நாட்டில் வாழும் தமிழர்களைச் சட்டத்தினால் போர்த்தி எதுவும் செய்யலாம் என்ற ஒரு நிலை மேலோங்கி நிற்பதற்கு இது ஒரு நல்ல உதாரணம்.

இதுவரை அலட்சியம் செய்யப்பட்ட, சந்தர்ப்பத்துக்கு ஏற்றாற் போலத் தட்டிக்கழிக்கப்பட்ட, நீதி சம்பந்தப்பட்ட ஒரு விவகாரத்தில் இப்போதாவது அரசு கவனம் செலுத்துவது குறிப்பிடக்கூடிய ஒன்றாகும். ஆனால் மேற்சொன்ன தீர்மானங்களை நிறைவேற்ற உரிய காலத்தில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

இவை; ஜனாதிபதித் தேர்தலையொட்டி முன்வைக்கப்பட்ட உறுதிமொழிகளாகி, பின்னர் மறக்கப்பட்டனவாகி விடலாகாது.

# வளம் கொழித்த வளலாய் கிராமம்

# மீண்டும் எழில் பெறுவது எப்போது?

## பகுதி 1

**மா. சந்திரசேகரன்**
[வளலாய் செய்தியாளர்]

குடாநாட்டின் வலி.கிழக்குப் பகுதியில் இராணுவ வலயத்தை அண்டி அமைந்துள்ளது வளலாய் கிராமம். ஈழ யுத்தத்தின் ஆரம்பகாலம் தொட்டே இப்பகுதி மக்கள் சந்தித்த, சந்தித்துவரும் அவலங்கள் ஏராளம். அபிவிருத்தி மற்றும் புனர்வாழ்வுப் பணிகளை பெரிய அளவில் எதிர்பார்த்து நிற்கும் இக்கிராமத்தின் நிலையை வெளிச்சத்துக்கு கொண்டுவர முயல்கிறது இக்கட்டுரை.

கோப்பாய்ப் பிரதேச செயலர் பிரிவின் அதிகார எல்லையில் உள்ள கரையோரப்பிரதேசமான வளலாய் வடக்கில் கடலும், மேற்கில் பலாலி இராணுவ முகாமும் கிழக்கில் தொண்டமனாறு இராணுவ முகாமும், தெற்கில் அச்சுவேலியையும் கொண்ட பரந்து பட்ட பாரிய கிராமமாகும் ஒரு காலத்தில் விவசாயத்துக்கும் கடல் தொழிலுக்கும் புகழ் பெற்ற இடமாக விளங்கியதுடன் வெளிநாடுகளில் இருந்து நம் நாட்டுக்கு வரும் உல்லாசப் பயணிகளைக் கவரும் வகையில் தரைத்தோற்றமும், கவர்ச்சியான கடல் வளமும் அமைந்துள்ளதால் இங்கு சிற்றம்பலம் கார்டினர் என்பவரால் அமைக்கப்பட்ட பாம் பீச் ஒன்றும் உள்ளது. இதில் வெளிநாட்டு உல்லாசப் பயணிகளை விட காங்கேசன்துறை சிமெந்துக் கூட்டுத்தாபனம், பலாலி விமான நிலையம், காங்கேசன்துறை இறங்குதுறை போன்ற அலுவலகங்களில் வேலை செய்த தென்பகுதி உயரதிகாரிகள் அப்போதைய அரசியல் பிரமுகர்கள் போன்றவர்களின் ஓய்வு நேரக் களிப்பிடமாகவும் விளங்கியது இது. தற்பொழுது அழிக்கப்பட்டு விட்டது

இங்கு நான்கு வகையான மண் வகைகள் உள்ளன. இதனால் எந்த வேளையிலும்

**செய்தி மடல்**

எப்பயிரையும் பயிரிட முடியும். மேலும் சின்ன வெங்காயச் செய்கையில் தன்னிறைவு கண்ட கிராமம். இதனால்விவசாயிகள் செல்வச் செழிப்புடன் வாழ்ந்தனர். 1980களில் வளலாய் கிராமத்துக்கு வருகை தந்த சிறிமாவோ பண்டாரநாயக்கா, அனுரா பண்டாரநாயக்கா போன்ற அரசியல் பிரமுகர்களுக்கு இப்பகுதி மக்கள் வெங்காய மாலை போட்டு வரவேற்றனர். இங்குள்ள விவசாயிகளது வசிப்பிடங்கள் யாவும் கல்வீடுகளே. மேலும் 1980-க்கு முன்னர் இங்குள்ள மொத்த சனத்தொகை ஆயிரத்து 139 குடும்பங்களே.

இங்கு கலைக்கதிர் சனசமூக நிலையம், வளலாய்சனசமூகநிலையம், பாரதி சனசமூக நிலையம், எமலியன் சனசமூகநிலையம் எனநான்கு சனசமூக நிலையங்களும், ஒரு கிராம முன்னேற்றச்சங்கமும் பல வணக்கத் தலங்களும், சகலவசதிகளையும் கொண்ட பொதுச் சந்தைஒன்றும், பாடசாலை, நூல் நிலையம், தபாற்கந்தோர் போன்றவையும் உள்ளன.

இவை அனைத்தும் இராணுவ நடவடிக்கையால் அழிக்கப்பட்டு இன்று காடாகக் காட்சி அளிக்கின்றன.

தமிழர் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டு அணு ஆயுதப் போராட்டமாகமாறியகாலங்களில் இருந்து பல்வேறு வகையான இராணுவ நடவடிக்கையால் இங்கு பல உயிர்கள் பறிக்கப்பட்டன; பெறுமதி வாய்ந்த உடைமைகள் அழிக்கப்பட்டன.

1983 ஆம் ஆண்டு ஆரம்பமான திருநெல்வேலி தாக்குதல்; வெலிக்கடைப் படுகொலைகள் போன்றவற்றுடன் ஆரம்பமான வளலாய் மக்களின் அவலம் நிறைந்த அகதி வாழ்க்கை இன்றும் முற்றுப் பெறவில்லை.

1983—1986 வரை வளலாயின் கரையோரப்பகுதி பாதுகாப்பற்ற சூனியப் பிரதேசமாக மாறியது தொழிலுக்காக கடலுக்குச் செல்லும் மீனவர்கள் திரும்புவதில்லை. கடலில் தாக்கப்படுவதும், கொல்லப்படுவதும் சர்வசாதாரண நிகழ்ச்சி. விவசாயிகள் தோட்டத்தில் வேலை செய்ய முடியாது. எந்த வேளையிலும் எதுவும் நிகழலாம் எனும் அச்ச உணர்வு. கடலில் இருந்து தரையை நோக்கிய பீரங்கித் தாக்குதல்; துப்பாக்கிச் சூடு போன்ற சம்பவங்கள் அதிகரித்த காலம்.

தொண்டமனாறு வெளிக்கள நிலையத்தில் நிலைகொண்டிருந்த இராணுவத்தினரும், பலாலி இராணுவத்தினரும் ரோந்தில் ஈடுபடும் போது நிகழும் குண்டுத்தாக்குதலின் எதிரொலியே மேற்கூறிய சம்பவங்களுக்குக் காரணம். அப்போது பல வீடுகள் இடிக்கப்பட்டன; தீ வைத்துக் கொளுத்தப்பட்டன. 1984 ஆம் ஆண்டு தென்னந்தோட்டம் ஒன்றில் வேலை செய்து கொண்டிருந்த வேலுப்பிள்ளை என்ற விவசாயி உயிருடன் கொட்டிலில் போட்டு எரிக்கப்பட்டார். இதே ஆண்டில் தோட்டத்தில் நீர் இறைத்துக்கொண்டிருந்த ஸ்ரீசபேசன் என்ற இளைஞன் துப்பாக்கிச் சூட்டினால் குடல் வெளியேறி மரணமானார். இதே காலப் பகுதியில் இருபதுக்கு மேற்பட்ட வீடுகள் தீயிட்டுக் கொளுத்தப்பட்டன 1985 ஆம் ஆண்டு பாடசாலைப் பொருள்காட்சி ஒன்றுக்கு சிப்பி சேகரிக்க கடற்கரைக்குச் சென்ற இந்து என்ற மாணவன் கத்திக் குத்துக்குப் பலியானான். 1987 ஆம் ஆண்டு வைகாசி மாதம் வளலாயின் மத்தியில் உள்ள முத்துப்புளியடி என்னும் இடத்தில் நடந்த மோதலின் போது பாதுகாப்பின் காரணமாக 'பங்கா' ஒன்றில் மறைந்திருந்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இரத்தினம் (வயது 50), இராசமணி(வயது 45), சிவபாதம்(வயது 35), அமிர்தலிங்கம் (வயது 30), செல்வரத்தினம் (வயது 45), சத்திவேல் (வயது 19) போன்றவர்கள் பங்கருக்குள் வைத்தே சுட்டுக் கொல்லப்பட்டனர். இதே தினம் பொம்பர் தாக்குதலில் சீனிப்பிள்ளை என்பவரும் ஹெலித் தாக்குதலில் செல்லப்பா என்ற வயோதிபரும், மணியம் என்ற ஆறு பிள்ளைகளின் தந்தையும் பாறுவதிப்பிள்ளை என்ற மூதாட்டியும் கொல்லப்பட்டனர் அத்துடன் இப்பகுதிமக்களின் பல இலட்சம் ரூபா பெறுமதிவாய்ந்த விவசாய விளைபொருள்கள், கால்நடைகள், வீடுகள் என்பன அழிக்கப்பட்டன

இதைத்தொடர்ந்து 1987 ஆனி மாதம் நடந்த 'லிபரேசன் ஒப்பரேசன்' இராணுவ நடவடிக்கையால் வளலாயில் இராணுவம் நிலைகொண்டது. இதனால் இம்மக்கள் நீர்வேலி, சிறுப்[illegible]டிப் பகுதிகளில் அமைக்கப்பட்ட அகதி முகாம்களில் மூன்று மாத காலத்தைக் கழித்தனர். இவ்வேளையில் வளலாயில் முன்னைய தாக்குதல் சம்பவங்களில் தப்பிய எஞ்சிய வீடுகளும் உடைக்கப்பட்டும், எரிக்கபபட்டும் கிராமம் முற்றும் முழுதாக வெளியாக்கப்பட்டது. பின்னர் ஏற்பட்ட இந்திய—இலங்கை சமாதான உடன்படிக்கையால் வளலாய் மக்கள் மீளக் குடியமர அனுமதிக்கப்பட்டனர். அப்போதைய காலப்பகுதியில் ரி. ஆர். ஆர். ஓ. அமைப்பின் உதவித்திட்டத்தினால் வீடுகளை முற்றாக இழந்த 57 குடும்பங்களுக்கு குடிசைகள் அமைத்துக் கொடுக்கப்பட்டன. அரசாங்கத்தால் 15 ஆயிரம் ரூபா வீட்டுத்திட்டத்தில் சில வீடுகள் கட்டப்பட்டனவாயினும் அவை பூர்த்தியாக்கப்படவில்லை. வசதி படைத்தவர்கள் புதிய வீடுகளைக் கட்டிக்கொண்டனர். பகுதி சேதமடைந்த வீடுகள் திருத்தியமைக்கப்பட்டன இவ்வாறாக வளலாய் மீண்டும் மக்கள் வாழக்கூடிய நிலைக்கு புனரமைக்கப்பட்டது.

இந்திய இராணுவம் நிலை கொண்ட காலங்களில் இப்பகுதியில் மோதல் சம்பவங்களோ அல்லது உடைமைகள் அழிப்புக்களோ இடம்பெறவில்லை. ஆயினும் திடீர் சுற்றிவளைப்புக்களும், கைதுகளும் அவ்வப்போது நிகழ்ந்து கொண்டே இருந்தன. இந்தியப்படைகள் இங்கிருந்து வெளியேறிய பின் சிறிது காலம் அமைதி நிலவிய போதிலும் அது நீடிக்கவில்லை. 1990 ஆம் ஆண்டு மீண்டும் போர் தொடங்கியதும், ஷெல் தாக்குதலும், பீரங்கி மற்றும் பொம்மர், ஹெலித்தாக்குதல்களும், முகாம் விஸ்தரிப்புக்களும் இப்பகுதிகளில் ஆரம்பமாயின. இதனால் மீண்டும் இப்பகுதி மக்கள் அகதி வாழ்க்கைக்குத் தள்ளப்பட்டனர். அவ்வப்போது கிராமத்துக்குள் வீழ்ந்து வெடிக்கும் 'ஷெல்'களால் அச்சமடைந்த மக்கள் அங்கொன்றும் இங்கொன்றுமாக இடம்பெயரத் தொடங்கினர். 1990 ஆம் ஆண்டு வளலாயை நோக்கி மேற்கொள்ளப்பட்ட அகோர ஷெல் தாக்குதலால் தோட்டத்தில் குளித்துக்கொண்டு நின்ற கர்ணன் [26 வயது] என்ற இளைஞன் அவ்விடத்திலேயே உடல் சிதறி பலியானார். செல்வநாயகம் செல்வக்குமார் என்ற பத்து வயதுச் சிறுவன் பலத்த காயமடைந்தான். இதனால் வளலாய் மீண்டும் அமைதியை இழந்தது.

1991-12-07 அன்று ஆரம்பமான இராணுவ நடவடிக்கையால் வளலாயை விட்டுவெளியேறியமக்கள்கடந்த 7 வருடகால அகதிவாழ்க்கையின்பின் மீண்டும் 1997 ஆம் ஆண்டு இப்பகுதி மக்களின் வேண்டுதலின் பேரில் வளலாயின் கிழக்குப் பகுதியில் குடியமர இராணுவம் அனுமதி அளித்தது இங்கு வீடுகள் அனைத்தும் அழிக்கப்பட்டு விட்டதுடன் வளலாய் இருந்த இடம் தெரியாமல் பற்றைக் காடாய்க் காட்சியளித்தது. பற்றைகளை வெட்டித் துப்புரவு செய்த மக்கள் இடிந்த வீட்டின்மேல் சிறு குடிசை அமைத்து வாழ்ந்து வருகின்றனர் இங்குள்ள மக்களின் ஜீவனோபாய தொழில் கமம் என்பதாலும் மீளக் குடியமர்ந்தவர்களின் தோட்டங்கள் வளலாயின் மேற்கில் அமைந்துள்ளதாலும் இங்குள்ள விவசாயக் குழுக்களுக்கும் இராணுவ அதிகாரிகளுக்கும் இடையே ஏற்பட்ட இணக்கப்பாட்டின் மூலம் மேற்குப் பகுதியில் தோட்டம் செய்ய மட்டும் அனுமதித்தனர் வளலாயின் வடக்குப் பகுதியில் ஒரு அடி நிலம் கூட மீளக் குடியமர அனுமதிக்கப்படவில்லை. இங்குள்ள 150-க்கு மேற்பட்ட குடும்பங்கள் வடமராட்சி, திக்கம் எனும் இடத்தில் அகதி முகாமில உள்ளனர். வளலாயில் கிழக்கு, தெற்கு போன்ற பகுதிகளில் மக்கள் மீளக் குடியேறிவிட்டனர். இங்கு தற்போது 248 குடும்பங்கள் உள்ளன. 200-க்கு மேற்பட்ட குடும்பங்கள் மீளக்குடியமர முடியா நிலையில் யாழ். மாவட்டத்தின் ஏனைய பகுதிகளில் அகதிகளாக வாழ்ந்து வருகின்றன.

(தொடரும்)

## நாளை

கார்த்திகை 28

செவ்வாய்க்கிழமை

திதி: ஷஷ்டி
பிற்பகல் 1.32 வரை

நட்சத்திரம்: அவிட்டம்
முற்பகல் 7.34 வரை.

உதயத்தின் முன்
திருவெம்பாவை
பூஜாரம்பம்

சுபநேரம்: 10.51—12.21
ராகுகாலம்: 3.21—4.51

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

## உதய வாக்கு

அஞ்சி, ஒடுங்கிக்கொண்டிருக்கும் வரை மக்கள் சேற்றிலே வேரற்றுக்கிடக்கும் செடி கொடிகளைப் போல் அழுகிப்போவார்கள்.

மாக்ஸிம் கார்க்கி

## தபாலகம் இடமாற்றம்

இது வரைகாலமும் நல்லூர் சட்டநாதர் கோவிலுக்கு அருகில் இயங்கி வந்த நல்லூர் உப அஞ்சல் அலுவலகம் கடந்த முதலாம் திகதி தொடக்கம் நல்லூர் சந்தைக்கு அருகில் உள்ள கட்டடம் ஒன்றுக்கு இடமாற்றம்செய்யப்பட்டுள்ளது.

(ஐ - 180)

## கோழித்தீன் விநியோகம்

யாழ். பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கே.கே.எஸ் வீதியில் அமைந்திருக்கும் விசேட விற்பனை நிலையத்தில் பிறிமா கோழித்தீன் வகைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இந்த மொத்த சில்லறை விற்பனை நிலையத்தில் கோதுமைமா, சீனி அரிசி என்பனவும் கட்டுப்பாடின்றி தாராளமாக வழங்கப்பட்டு வருவதாக சங்கத் தலைவர் தெரிவித்தார்.

[ஐ-17]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# PATRICIAN INSTITUTES

FIDE ET LABORE

# பற்றீஷன்
## தொழிற்பயிற்சி நிறுவனங்கள்

2000 ஆம் ஆண்டிற்கான தொழில் நுட்ப பயிற்சி நெறிகளின் புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன.

**[ ஆரம்பம்: 10 — 01 — 2000 ]**

1) A) DIPLOMA IN MS - OFFICE ★ DURATION 6 MONTHS
B) CERTIFICATE COURSES
- I) MS-WORD 2000
- II) MS EXCEL 2000
- III) MS ACCESS 2000
- IV) MS-POWER POINT
- V) C ++
- VI) PASCAL
- VII) d BASE
- VIII) LOTUS 123
- IX) VISUAL BASIC VR. 6

★ DURATION 3 MONTHS EACH

★ INTRODUCING THE "INTERNET" & E -- MAIL

★ [மேற்படி பயிற்சி நெறிகளைப் பயில்பவர்களுக்கு போதியளவு செய்முறைகள் (PRACTICALS CLASS) வழங்கப்படும் அத்துடன் கட்டணங்கள் இன்றி "INTERNET" "E - MAIL" செய்முறை மூலம் அறிமுகப்படுத்தப்படும் )

2) BOOK KEEPING & ACCOUNTS [I A. B.] ★ DURATION 6 MONTHS

3) CIVIL DRAUGHTSMAN SHIP COURSE ★ DURATION 6 MONTHS

4) SHORTHAND & TYPING (ENGLISH) அங்கில சுருக்கெழுத்தும் தட்டெழுத்தும் ★ DURATION 6 MONTHS

5) SHORTHAND & TYPING (TAMIL) தமிழ் சுருக்கெழுத்தும் தட்டெழுத்தும் ★ DURATION 6 MONTHS

6) GENERAL MOTOR MECHANISM மோட்டார் வாகனம் திருத்துதல் (Petrol & Diesel வாகனங்கள்) ★ DURATION ONE YEAR

7) ELECTRICAL WIRING மின்சார இணைப்பு ★ DURATION 3 MONTHS

8) MOTOR REWINDING மோட்டர் ரீவைண்டிங் ★ DURATION 4 MONTHS

9) GENERAL ELECTRICIAN ஜெனரல் எலெக்ரீஷன்
[G C E (O/L) கணிதம் சித்தியடைந்தவர்கள் மட்டும் விண்ணப்பிக்கவும்.) ★ DURATION 6 MONTHS
[மேற்படி (6), (7), (8), (9) பயிற்சி நெறிகளைக் கற்பவர்களுக்கு மேலதிகமாக மூன்று மாதங்களுக்கு Practicals வழங்கப்படும் ]

10) RADIO & T. V. REPAIRING ★ DURATION 6 MONTHS

11) LATHE MACHINE OPERATION கடைச்சல் இயந்திரத் தொழில் பயிற்சி ★ DURATION 3 MONTHS

12) ARC WELDING மின் ஒட்டுநர் பயிற்சி ★ DURATION 2 MONTHS

13) CARPENTRY மரவேலை (With Use Of Machinery) ★ DURATION ONE YEAR
[6, (7), (8), (9), (10), (11), (12), (13) ஆகிய பயிற்சி நெறிகளை பயில்பவர்களில் தகுதியானவர்கள் தேசிய பயிலுநர் பயிற்சியில் சேர்த்துக்கொள்ளப் படுவார்கள்.]

Note:

1) பயிற்சிக் கட்டணங்களைத் தவணை முறையில் செலுத்தலாம்.
2) வன்செயலால் பாதிக்கப்பட்ட அல்லது வறுமைக் கோட்டின் கீழ் வாழும் மாணவர்கள் போதிய ஆதாரம் காட்டி பங்குக் குருவானவரின் (Parish Priest) சிபார்சின் பேரில் பயிற்சிக் கட்டணத்தில் சலுகையைப் பெற்றுக் கொள்ளலாம்.
3) பயிற்சி நெறி சம்பந்தமான சகல விவரங்களையும் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்
4) சகல பயிற்சி நெறிக்கான விண்ணப்பங்களை முன்கூட்டியே பதிவு செய்யும் படி கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

PRODUCTION AND REPAIRING ON ORDER......!

### கட்டமைத்தலும் திருத்துதலும்

சகல விதமான இரும்புசார் உற்பத்திப் பொருள்களும், ஓட்டு வேலைகளும், மரத்தளபாடங்களும், உறுதியான தொழில்சார் அறிவு மூலமும் ஓடருக்கு மிக விரைவாகவும், திறமையாகவும் செய்து கொடுக்கப்படும், அத்துடன Fridge. Water Pumps, Electrical பொருள்கள் சம்பந்தமான சகல வேலைகளும் செய்து கொடுக்கப்படும்.

### வாகன தகுதிச் சான்றிதழ் - 2000
FITNESS CERTIFICATE FOR MOTOR VEHICLE

2000 ஆம் ஆண்டுக்கான வாகனத் தகுதிச் சான்றிதழ் எமது நிறுவனத்தினால் வழங்கப்பட்டுக்கொண்டு இருக்கின்றன என்பதனை சகல வாகன உரிமையாளர்களுக்கும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

மாணவர்களுக்கும், வாடிக்கையாளர்களுக்கும் நத்தார், புதுவருட வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

மேலதிக விவரங்களுக்கு:
REGISTRAR,
PATRICIAN INSTITUTES
59. St. PATRICKS ROAD, JAFFNA.

(சி/10171)


# யாழ். பிரதேச செயலர் பிரிவில் நிவாரணப் பொருள் விநியோகம்

அரியாலை, டிசெ. 13
யாழ். பிரதேச செயலர் பிரிவில் இடம்பெயர்ந்தோருக்கான உலர் உணவு நிவாரணப் பொருள்கள் வழங்கும் பணி ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது.

இடம்பெயர்ந்தோருக்கான உலர் உணவு முத்திரையின் 81 ஆவது 'ஏ' 'பீ' புள்ளிகளுக்கு யாழ். பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கிளைகள் ஊடாக நிவாரணப் பொருள்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

அரிசி, சீனி, மைசூர்ப்பருப்பு, பால்மா பைக்கற் என்பன வழங்கப்படுகின்றன. [ஐ-17]

## கரணவாய் மேற்கில்
# வீட்டை முற்றுகையிட்டு கசிப்புப் போத்தல்கள் மீட்பு

நெல்லியடி, டிசெ. 13
இரவுவேளை வீடொன்றை முற்றுகையிட்ட பொலீஸ் குழுவினர் அங்கிருந்து 15 போத்தல் கசிப்பைக் கைப்பற்றியதுடன், குடும்பஸ்தர் ஒருவரையும் கைதுசெய்துள்ளனர்.

கடந்த 7 ஆம் திகதி இரவு, கரணவாய் மேற்குப் பகுதிக்குச் சென்ற நெல்லியடி பொலீஸ்நிலைய உபபொலீஸ் பரீட்சகர் டபிள்யூ. றணவீரா தலைமையிலான பொலீஸ் குழுவினரே அப்பகுதியில் இராசன் தருமலிங்கம் என்பவரது வீட்டைச் சோதனையிட்ட சமயம், கசிப்பு கைப்பற்றப்பட்டுள்ளது.

கைப்பற்றிய கசிப்புடன் குறித்த சந்தேகநபர், மறுநாள் காலை பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றில், நெல்லியடி பொலீஸாரினால் ஆஜர் செய்யப்பட்டார். கசிப்பு வைத்திருந்த குற்றத்திற்காக ஒரு லட்சம் ரூபாவை அபராதமாகச் செலுத்துமாறு பதில் நீதிவான் அ. க. நடராஜா உத்தரவிட்டார். (ஐ-109)

# திறந்த நிலையில் விற்பனை செய்த 20 இறாத்தல் பாண் அழிப்பு

கொழும்புத்துறை. டிசெ. 13
அரியாலை கண்டி வீதியில் உள்ள பலசரக்குக் கடை ஒன்றில் கடந்த 4 ஆம் திகதி திறந்த நிலையில் வைக்கப்பட்டு விற்பனை செய்யப்பட்ட பாண் சுகாதாரப் பகுதியினரால் கைப்பற்றப்பட்டது.

யாழ். மாநகரசபையின் பிரதம சுகாதாரப் பரிசோதகர் திறந்த நிலையில் வைக்கப்பட்டிருந்த இருபது இறாத்தல் பாணையும் கடைமுன்னால் வீதியில் வெட்டிப் புதைத்தார்.

கடைகளில் பாண் விற்பனை செய்பவர்கள் கண்ணாடிப் பெட்டியில் பாதுகாப்பான முறையில் இலையான், ஈக்கள் மொய்க்காதபடி வைத்து விற்பனை செய்யுமாறு அறிவுறுத்தப்பட்டிருப்பது தெரிந்ததே. (ஐ-30-17)

## இளைஞர்கள் மூவர் கைது

யாழ்ப்பாணம், டிசெ.13
ஏழாலை, சித்தன்கேணி ஆகிய இடங்களைச் சேர்ந்த 3 இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் உறவினர்களால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஏழாலை தெற்கு மயிலங்காட்டைச் சேர்ந்தவர்களான மாதன் செல்வம் [வயது 37] பொன்னையா ரவிக்குமார் [வயது 30] ஆகிய இருவரும் 511 ஆவது படையணி படையினரால் கடந்த 10ஆம் திகதி கைதுசெய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும்—

வட்டு. கிழக்கு சித்தன்கேணியைச் சேர்ந்த பாலசிங்கம் புஸ்பராசா (வயது 27) என்பவர் கடந்த 9 ஆம் திகதி பண்டத்தரிப்பில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளதாகவும்—

முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர்களில் மாதன் செல்வம் கடந்த நவம்பர் மாதம் 2, 18, 21 ஆம் திகதிகளில் படையினரால் கைது செய்யப்பட்டு விடுவிக்கப்பட்டவர் என்றும்—

பாலசிங்கம் புஸ்பராசா 96 ஆம் ஆண்டு காலப்பகுதியில் கைது செய்யப்பட்டு பின்னர் விடுவிக்கப்பட்டவர் என்றும் - தெரிவிக்கப்பட்டது.

மேற்படி 3 பேரதும் கைது தொடர்பாக படையினரால் ரசீது வழங்கப்பட்டுள்ளதாக இந்த முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-10)

## பளையில் தொழுநோய் பரிசோதனை

பளை வண்ணான்கேணி வடக்குப் பகுதியில் தொழுநோயால் பீடிக்கப்பட்ட ஒருவர் கண்டுபிடிக்கப்பட்டதையடுத்து இப்பகுதி மக்களுக்கான தொழுநோய் பரிசோதனை எதிர்வரும் 17 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வண்ணான்கேணி கிராமிய அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் நடத்தப்படவுள்ளதாக பளை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் க. கர்ணன் அறிவித்துள்ளார் (ஐ-117)

## கூட்டுறவுச் சங்க பேக்கறியில் பாண் 8 ரூபா

நல்லூர் பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் சங்க பேக்கறியில் உற்பத்தி செய்யப்படும் பாண் ஒரு இறாத்தல் (350 கிறாம) 8 ரூபா விலையில் விற்பனை செய்துவருகின்றது. வெளி இடங்களில் இப் பாண் 8 ரூபா 50 சதமாக விற்பனை செய்யப்படுகிறது. (ஐ-135]


# கண்ணீர் அஞ்சலி

எமது செயலக கிராம உத்தியோகத்தர்

## பொ. தர்மகுலசேகரம்

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அமரரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரதேச செயலரும்
பிரதேச செயலக நலன்புரிச் சங்கத் தலைவரும், உறுப்பினர்களும்.

பிரதேச செயலகம்,
வலிகாமம் மேற்கு, சங்கானை.

[சி/10193]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ✉ வாசகர் திருமுகம்

## 986 இலக்க பேருந்து சேவை மீண்டும் ஆரம்பிப்பது எப்போது

கோண்டாவில் பேருந்து டிப்போவினால் யாழ்ப்பாணம் வழமையான நிலையில் இருந்தபோது நடத்தப்பட்டு வந்த சகலமார்க்க பஸ் சேவைகளும் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. ஆனால் யாழ்ப்பாணத்திலிருந்து இராசவீதி ஊடாக அச்சுவேலி செல்லும் 986 இலக்க பேருந்து சேவை மட்டும் இதுவரை ஆரம்பிக்கப்படவில்லை.

இது பற்றி கோண்டாவில் நிர்வாகத்தினருடன் முன்பு தொடர்பு கொண்டபோது பாதை குண்டும் குழியுமாக இருப்பதால் பாதை திருத்திய பின்பே இச்சேவை ஆரம்பிக்கப்படும் எனக் கூறப்பட்டது. ஆனால் பாதை சீர்செய்யப்பட்டும் இச்சேவை ஆரம்பிக்கப்படாமல் இருப்பதன் காரணம் யாதோ? இராச வீதியில் வாழும் மக்களும் பாடசாலைச் சிறார்களும் பல மைல்கள் கால்நடையாக பருத்தித்துறை — யாழ்ப்பாண வீதிக்குச் சென்றே தங்கள் பயணத்தை மேற்கொள்ள வேண்டிய இக்கட்டான நிலைக்கு ஆளாகி உள்ளனர். இவர்கள் துயர் துடைக்க கோண்டாவில் பேருந்து டிப்போ முன்வருமா? டிப்போ அத்தியட்சகர் இது சம்பந்தமாக முயற்சி எடுத்து இந்தப்பஸ் சேவையை மீண்டும் ஆரம்பிப்பாரா? அல்லது ஏன் இச்சேவை ஆரம்பிக்கப்படவில்லை என்பது சம்பந்தமாக தமது இடர்பாடுகளை எமக்கு அறியத் தருவாரா?

(இதே கருத்துக்களை பிரச்சினைகளை முன்வைத்து நீர்வேலியைச் சேர்ந்தளன். இரத்தினலிங்கமும் கடிதம் வரைந்துள்ளார்.)

— த. ராசா

நீர்வேலி.

## வயதெல்லையை அதிகரிப்பார்களா?

வடக்கு—கிழக்கு மாகாணத்தில் படித்த வசதியற்ற ஆண்கள் பெண்கள் அதிகமானோர் வேலையற்றும், விரக்தி நிலையிலும் இருக்கிறார்கள் என்பதை நாடறியும்.

இங்கு நீண்டகாலமாக அதிகமான வேலை வாய்ப்புக்கள் வழங்கப்படவில்லை. மேற்படிப்புக்குச் செல்ல முடியாமல் இருப்பவர்களும் பெரும் எண்ணிக்கை என்பது எல்லோருக்கும் தெரியும். உயர்படிப்புக்குச் சென்றவர்கள் தவிர ஏனைய தர மாணவர்களுக்குப் புள்ளி அடிப்படையில் தொழில் வாய்ப்பளிப்பதும் தொழிற்கல்வி அளிப்பதும் முறைமை.

தொடக்கம் பிந்திவிட்டாலும் இப்போதாவது சரியான முடிவை மேற்கொள்வது பாராட்டுக்குரியது. இத்திட்டம் முதன்முதலாக ஆரம்பிக்கப்படுவதால் தகுதியுள்ள மாணவர்களுக்குச் சந்தர்ப்பமளிக்கப்பட வேண்டும். இன்று பார்ப்போம் நாளை பார்ப்போம் என்று ஏங்கியிருக்க 30 வயது கடந்துவிடுவது பெரிதல்ல. விண்ணப்பங்கள் கோரப்படும்போது 31, 32 வயதுடையவர்கள் விண்ணப்பிக்க முடியாது போய்விட்டதே என்று திருமணத்தை எதிர்பார்த்திருக்கும் துன்பம் மிகுந்த பெண்கள் உட்பட எல்லோரும் அலுத்துக்கொள்கிறார்கள்.

முந்திய ஆண்டுப் பிள்ளைகளுக்கும் சந்தர்ப்பம் அளிக்கும் வகையில் வயதெல்லை 35 வயதாக அதிகரிக்கப்பட வேண்டும். இவ்விடயத்தில் சம்பந்தப்பட்டவர்கள், கல்வியமைச்சினர், கல்வியாளர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தினர் ஆவன செய்வார்களா?

செ. க. துரைரத்தினம்
அதிபர்

மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி.

## பாராட்டுவோம்

யாழ். மருத்துவ பீடத்தில் குழந்தைகள் சிகிச்சை வல்லுநர் இல்லாமையால் அங்கு கல்வி பயிலும் இறுதி ஆண்டு மாணவர்கள், தமது எதிர்காலம் எவ்வாறு அமையப் போகிறது என எண்ணி ஏங்கி நின்ற வேளையில், இந்த மாணவர்கள் மீது அன்பும் அனுதாபமும் கொண்டு, அவர்களுக்குப் பயிற்சி வழங்க விரைந்து வந்தார் கொழும்பில் கடமையாற்றும் குழந்தைகள் சிகிச்சை வல்லுநர் டாக்டர் ஷாழினி சிறீரங்கநாதன். தயாள சிந்தை கொண்ட இவர், குறுகிய காலத்தில் அதிக மாணவர்களுக்குப் பயிற்சி அளிப்பதற்காகத் தியத்தலாவையிலிருந்து குழந்தைகள் சிகிச்சை நிபுணர் டாக்டர் பி. வி. டி. எஸ். பி. அபயவர்த்தனாவையும் தம்முடன் அழைத்து வந்தார். இவ்விரு மருத்துவ வல்லுநர்களும் குறுகிய காலத்தில் மருத்துவ மாணவர்களுக்குச் செறிந்த, சிறந்த பயிற்சியை வழங்கியுள்ளனர்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் தனது வெள்ளி விழாவைக் கொண்டாடிக் கொண்டிருந்த வேளையில் இவ்விரு டாக்டர்களும் ஆற்றிய அரும்பணியும் வெள்ளி விழாவின் ஓர் அங்கமாக அமைந்து வெள்ளி விழாவிற்கு மெருகூட்டியது. இவ்விரு டாக்டர்களும் ஆற்றிய சேவை உளமாரப் பாராட்டப்பட வேண்டியவை; நன்றி கூறப்பட வேண்டியவை.

கொழும்பில் கடமையாற்றும் ஏனைய மருத்துவ வல்லுநர்களும் இவர்களது முன்மாதிரியைப் பின்பற்றி யாழ். பல்கலைக்கழகத்தின் மருத்துவ மாணவர்களுக்குப் பயிற்சி வழங்க முன்வர வேண்டும். அனைவரும் அவர்களை அன்புடன் வரவேற்கவும் வேண்டும்.

ச. ஆ. கோபாலமூர்த்தி

திருநெல்வேலி.

# வாழைச்சேனையில் கடும் மழை:
# 15 ஆயிரம் மக்கள் இடம்பெயர்வு

மட்டக்களப்பு, டிசெ. 13

மட்டக்களப்பு மாவட்டத்தில் வாழைச்சேனையில் நேற்று முன்தினம் பெய்த கடும் மழை காரணமாக 15 ஆயிரம் பேர் வீடுகளை இழந்து இடம்பெயர்ந்துள்ளனர்.

செம்மண் ஓடை, நுரைத்துளவுக்கேணி, வதுரையா நகர், மாஞ்சோலை ஆகிய கிராமங்கள் நீரில் மூழ்கியுள்ளன.

அந்தக் கிராமங்களில் உள்ள வீடுகள், பாடசாலைகள், பள்ளிவாசல்கள் ஆகியன நீரில் மூழ்கியதால் மக்கள் இருக்க இடமின்றி இடம்பெயர்ந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

பிரதி அமைச்சர் எம். எல். எம். ஹிஸ்புல்லா நேற்று அந்தப் பகுதிகளுக்கு சென்று நிவாரணப் பணிகளை ஒழுங்கு படுத்தினார்.

சமூகசேவைப் பணிப்பாளருடன் அவர் தொடர்பு கொண்டு இடம் பெயர்ந்த மக்களுக்கு உலர் உணவு நிவாரணம் வழங்குமாறுகேட்டுக் கொண்டார்.

(உ-க-3)

### ஜனாதிபதி தேர்தலுக்கான

## வெளிநாட்டு அவதானிகள் நேற்று முதல் வருகை

கொழும்பு, டிசெ 13

எதிர்வரும் 21 ஆம் திகதி நடைபெறவிருக்கும் ஜனாதிபதித் தேர்தலில் கண்காணிப்புப் பணிகளை மேற்கொள்வதற்காக வெளிநாட்டு அவதானிகள் கொழும்பு வரத் தொடங்கியுள்ளனர்.

சுதந்திர தேர்தல் சம்பந்தமான கண்காணிப்புக் குழுவின் அழைப்பின் பேரில் ஒரு தொகுதியினர் நேற்று வந்து சேர்ந்துள்ளனர் என்றும்—

மேலும் 55 பேர் எதிர்வரும் வியாழக்கிழமை வருவர் என்றும்—

அந்தக் குழுவின் முக்கியஸ்தர்களில் ஒருவரான கிங்ஸ்லி ரொட்ரிகோ தெரிவித்தார்.

தேர்தல் ஆணையாளரின் அழைப்பின் பேரில் வரவிருக்கும் 25 பேரில் 15 பேர் எதிர்வரும் புதன்கிழமையும் —

எஞ்சியோர் வார இறுதியிலும்—

வந்து சேர்வர் என்று தேர்தல் திணைக்களம் அறிவித்துள்ளது.

தேர்தல் கண்காணிப்புப் பணிகளுக்காக சுமார் நூறு அவதானிகள் வருவர் என மதிப்பிடப்பட்டுள்ளது.

(உ-க-3)

## சுகாதாரக் கல்வி தொடர்பாக சித்திர, சுவரொட்டிப் போட்டிகள்

யாழ்ப்பாணம், டிசெ. 13

யாழ் மாவட்ட இளைஞர் யுவதிகளிடையே குடும்ப சுகாதாரக் கல்வி தொடர்பான அறிவினை வளர்க்கவும் இதுதொடர்பான நடவடிக்கைகளை விருத்தி செய்து கொள்ளவும் அவர்கள் கலைத் துறையைப் பயன்படுத்திக்கொள்ள வசதியாக சித்திரம் மற்றும் சுவரொட்டிப் போட்டிகளை நடத்த யாழ். மாவட்ட தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

மேற்குறித்த இரண்டு போட்டிகளுக்கும் 'இளமையின் எழுச்சி' 'சிறுவர் துஷ்பிரயோகம்', 'இளைஞர்களும் எயிட்ஸ் அபாயமும்', 'திட்டமிடப்பட்ட குடும்பம்' ஆகிய தலைப்புகளைப் பயன்படுத்திக்கொள்ள முடியும்.

சித்திரங்கள், (நூதன) எண்ணெய் வர்ணம், நீர் வர்ணம், கலப்பு அல்லது வேறு எந்த விதமான நிலையற்ற வர்ணங்களைக் கொண்டும் வரைய முடியும். இது ஆகக் குறைந்தது 12 X 22 அங்குல அளவைக் கொண்டிருத்தல் வேண்டும்.

சுவரொட்டிகள் 17 X 22 அங்குல அளவுடையதாக இருக்க வேண்டும்.

15 வயதுக்கும் 30 வயதுக்கும் இடைப்பட்ட இருசாராரும் போட்டியில் பங்குபற்ற முடியும். வெற்றி பெறுவோருக்கு பணப்பரிசில்கள் வழங்கப்படவுள்ளன.

சுயமாகத் தயாரித்த விண்ணப்பத்தை எதிர்வரும் டிசெம்பர் 20 ஆம் திகதிக்கு முன்னர் 'தேசிய இளைஞர் சேவைகள் மன்றம், கண்டி வீதி, யாழ்ப்பாணம்' என்ற முகவரிக்கு அனுப்பிவைக்குமாறும்—

போட்டி நடைபெறும் திகதி, இடம் பின்னர் அறிவிக்கப்படும் என்றும் —

மன்ற உதவிப்பணிப்பாளர் ரீ.சிவதட்சணாமூர்த்தி தெரிவித்துள்ளார். [ஐ-9]

## விடுமுறையிலும் நூலகர்கள் கடமை

யாழ்ப்பாணம், டிசெ. 13

குடாநாட்டில் உள்ள பாடசாலைகளில் கடமையாற்றும் நூலக மேம்பாட்டு அலுவலர்களை 3 ஆம் தவணைக்கான விடுமுறை நாள்களிலும் பாடசாலை நூலகங்களில் கடமையாற்றுமாறு பணிக்கப்பட்டிருப்பதாக யாழ். கல்வி வலய வட்டாரங்கள் தெரிவித்தன.

(ஐ-10)

## சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம், டிசெ 13

மாவை கொல்லங்கலட்டி பிள்ளையார் கோயிலில் நாளை செவ்வாய்க்கிழமை காலை பெருங்கதை உற்சவம் நடைபெறும். காலை 8 மணி முதல் மகா கணபதி ஹோமம் ஆரம்பமாகும்

அன்றைய தினம் திருவெம்பாவை பூசை ஆரம்பமாகி பத்து நாள்களுக்கு நடைபெறும். (க)

★ ★ ★

காரைநகர் தன்னைப் பிள்ளையார் ஆலய பெருங்கதைத் திருவிழா இன்று திங்கட்கிழமை அபிஷேகத்துடன் நடைபெறும்.

இந்த நிகழ்வில் 'விக்கினம் தீர்க்கும் விநாயகர்' எனும் தலைப்பில் செஞ்சொற்செல்வர் ஆறு திருமுருகன் சிறப்புச்சொற்பொழிவாற்றுவார்.

★ ★ ★

நாட்டு மக்களின் நன்மை கருதி, அமைதியும் சமாதானமும் வேண்டி கொடிகாமம் நாவலடி சிவகாமசுந்தரி அம்மன் ஆலயத்தில் இன்று காலை விஷேட அபிஷேக ஆராதனை நடைபெறவுள்ளது. [ஐ-15-30]

★ ★ ★

மட்டுவில் வடக்கு பன்றித்தலைச்சி கண்ணகை அம்மன் கோயில் வருடாந்த உற்சவம் நாளை செவ்வாய்க்கிழமை காலை 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

தொடர்ந்து 10 நாள்களுக்கு நடைபெறும் உற்சவங்களில் எதிர்வரும் 19 ஆம் திகதி காலை 11 மணிக்கு தேர் உற்சவமும் மறுநாள் காலை 11 மணிக்கு தீர்த்த உற்சவமும் நடைபெறும். [ஐ-15-30]

## அச்சுவேலிப் பண்ணையில் கோழிக் குஞ்சு விநியோகம்

அச்சுவேலி, டிசெ. 13

அச்சுவேலி கைத்தொழிற்பேட்டை கோழிப்பண்ணை குஞ்சு பொரிப்பு நிலையத்தில் முதலாவது தொகுதி கோழிக் குஞ்சுகள் இம்மாதம் 17 ஆம் திகதி விற்பனை செய்யப்படவுள்ளன.

கனடாவில் இருந்து கடந்த மே மாதம் வரவழைக்கப்பட்ட தாய்க்கோழிகளில் இருந்து பெறப்பட்ட முட்டைகளே அடைவைக்கப்பட்டு அதில் இருந்து பெறப்பட்ட குஞ்சுகள் முதற்தடவையாக விறபனை செய்யப்படவுள்ளன.

(ஐ-11)

## சமாசத்துக்குக் கப்பலில் அத்தியாவசியப் பொருள்கள்

அரியாலை டிசெ. 13

யாழ். மாவட்ட விவசாய உற்பத்தி நுகர்வோர் கூட்டுறவுச் சமாசத்திற்கு 'கிரிந்த' கப்பலில் ஒரு தொகுதி அத்தியாவசியப் பொருள்கள் எடுத்து வரப்பட்டுள்ளன.

இந்தக் கப்பலில் எடுத்து வரப்பட்ட பொருள்கள் யாழ் மாவட்டத்தில் உள்ள பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு பகிர்ந்து வழங்கப்பட்டு வருவதாகச் சமாசத் தலைவர் சீ. வீ. கே. சிவஞானம் தெரிவித்தார்.

(ஐ-17)

## கண்ணீர் அஞ்சலி

எமது சக மாணவன்

**திருச்செல்வம் சுதர்சனின்**

அன்புச் சகோதரன்

**திருச்செல்வம் ரவிதர்சனின்**

அகாலமரணத்தால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தி அடைய பிரார்த்திக்கின்றோம்.

2001 கலை, வர்த்தகப் பிரிவு மாணவ, மாணவிகள்,
கொக்குவில் இந்துக் கல்லூரி.

(71755)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இராணுவக் கட்டுப்பாடற்ற
# மட்டக்களப்புப் பிரதேசத்திலும் வாக்காளர் அட்டைகள் விநியோகம்

மட்டக்களப்பு, டிசெ. 13
மட்டக்களப்பு மாவட்டத்தில் இராணுவக் கட்டுப்பாடு அற்ற பிரதேசத்தில் வாக்காளர் அட்டை விநியோகம் தற்சமயம் நடைபெற்றுவருகின்றது
தபால் திணைக்கள ஊழியர்கள் கடந்த மூன்று தினங்களாக உரிய முகவரிகளில் வற்றைச் சேர்ப்பித்து வருகின்றனர் என்றும்—
மக்கள் ஆர்வத்துடன் வாக்காளர் அட்டைகளைப் பெறுகின்றனர் என்றும்—கூறப்பட்டது.
ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் ஐ. தே. க. வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்கவின் படங்களுடன் கூடிய சுவரொட்டிகளும் அப்பிரதேசங்களில் பரவலாகக் காணப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது. [உ-3-21]

# வடக்குக்கான உணவுக் கப்பல்களில் புலிகளுக்கு ஆயுதங்கள் கடத்தல்!
## ஜனாதிபதி சந்திரிகா கூறுகின்றார்

கொழும்பு, டிசெ 13
''கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு உணவுப் பொருள்களை ஏற்றிச் செல்லும் சில தனியார் கப்பல்கள் புலிகள் இயக்கத்தின் ஆயுதக் கடத்தல் நடவடிக்கைகளுக்கு உதவி புரிகின்றன என எமக்குத் தகவல்கள் கிடைத்துள்ளன'' என்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.
கொழும்புத் தமிழ் பத்திரிகைகளுக்கு அளித்துள்ள பேட்டியின் இப்படிக் கூறியுள்ளார். இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-
புலிகளுக்கு ஆயுதங்கள் கடத்தப்படுவதைத் தடுப்பதற்காக இனிமேல் — அதாவது அடுத்த மாதம் முதல் வடக்குக்கான கப்பல் சேவையை அரசாங்கமே நேரடியாக நடத்தவிருக்கின்றது
இதற்காக இரு பயணிகள் கப்பல்களையும் உணவுப் பொருள்களைக் கொண்டு செல்ல வேறு சில கப்பல்களையும் கொள்வனவு செய்ய முடிவு செய்யப்பட்டுள்ளது
முதல் தொகுதி கப்பல்கள் அடுத்த மாதம் கொழும்புக்கு வந்து சேரவிருக்கின்றன. அதனையடுத்து கப்பல் சேவை ஆரம்பிக்கப்படும்.
இந்தச் சேவை ஆரம்பிக்கப்பட்ட பின்னர் யாழ்ப்பாணத்தில் பொருள்களின் விலைகள் குறையும் — என்றார். (உ-3-21)

### கட்டைக்காடு,
[முதலாம் பக்கத் தொடர்]
டைக்காடு பகுதிகளை படையினர் கைவிட்டதை பலாலியில் உயர் இராணுவ வட்டாரங்கள் ஒப்புக் கொண்டன.
துருப்புகள் சில நூறு மீற்றர் பின்வாங்கி, புதிய வலையமைப்பில் வியூகங்கள், நிலைகளை அமைத்திருப்பதாக அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.
''மழை வெள்ளம் தேங்கி நிற்கும் — வெறும் வெளியான — வெற்றிலைக்கேணி பிரதேசத்தைக் கைவிட்டு — சற்று விலத்தி — புதிய ஒழுங்கில் முன்னரங்க நிலைகள் அமைக்கப்பட்டன. மேலதிக துருப்புக்கள் குவிக்கப்பட்டு அவை பலப்படுத்தப்பட்டுள்ளன. அவற்றை ஊடுருவித் தாண்டுவது புலிகளால் முடியாதது'' — என்றும் அவ்வட்டாரங்கள் தெரிவித்தன.
[உ-3-7]

### இடைக்கால...
(முதலாம் பக்கத் தொடர்)
தமிழ் மக்களின் அன்றாட அலுவல்கள் துரிதமாகப் பூர்த்தி செய்யப்பட முடியாத நிலையே நிலவுகின்றது. இதனைக் கருத்தில் கொண்டே இந்த இடைக்கால நிர்வாக சபை ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.
தமிழர்களின் பிரச்சினைக்கு இடைக்கால நிர்வாக சபை நிரந்தரத் தீர்வல்ல; தற்காலிக ஏற்பாடே.
சில வருடங்களுக்கு முன்னர் இந்த நிர்வாக சபைத் திட்டத்தை முன்வைத்த போது தமிழர் விடுதலைக் கூட்டணி தவிர அனைத்துத் தமிழ்க் கட்சிகளும் ஏற்றுக் கொண்டன. இடைக்கால நிர்வாக சபையில் சகல இனக் குழுக்களுக்கும் உரிய வகையில் பிரதிநிதித்துவம் வழங்குவதற்கு முடிவு செய்யப்பட்டுள்ளது.
அரசமைப்புச் சட்டம் திருத்தப்படும் வரை இந்த இடைக்கால நிர்வாக சபை இயங்கும்.
நிர்வாக சபைக்கான பிரதிநிதிகளை நியமிக்குமாறு தமிழ்க் கட்சிகளை மட்டுமல்லாது ஐ. தே. கவையும் கேட்டுள்ளேன். நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் சகல கட்சிகளின் பிரதிநிதிகளும் இதில் அங்கம் வகிப்பர். தமிழ் கட்சிகளின் பிரதிநிதிகளே கூடுதலாக இருப்பர் — என்றார் அவர் உ-3-21)

### இம்சைக்கு...
(முதலாம் பக்கத் தொடர்)
டுபோய்க் கொட்டும்படி நிர்ப்பந்திக்கின்றனர் எனவும்—
இதனால் தமிழ்ப்பெண்கள் பலர்பலவித நோய்களுக்கு உள்ளாகியுள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது
விடுதலைப்புலிகளுடன் தொடர்புடையவர்கள் எனத் தெரிவித்தே தமிழ்ப் பெண் கைதிகள் மீது வன்முறைகள் கட்டவிழ்க்கப்படுவதாகவும்—
இந்த நடவடிக்கைகள் குறித்து மனித உரிமைகள் ஆணைக்குழு மற்றும் சிறைச்சாலை ஆணையாளர் ஆகியோருக்கு மகஜர்கள் அனுப்பி வைக்கப்பட்டபோதிலும் இதுவரை ஆக்கபூர்வமான நடவடிக்கை எதுவும் மேற்கொள்ளப்படவில்லை எனவும்—
மனித உரிமைகள் சட்டத்தரணி இயூஜினி மரியாம்பிள்ளை தெரிவித்துள்ளார்.
மேற்படி விடயம் குறித்து நீதி அமைச்சருக்கும் தாம் கடிதம் அனுப்பியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.
(உ-7)

### ஓய்வு...
[முதலாம் பக்கத் தொடர்]
உள்நாட்டலுவல்கள் அமைச்சர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க தெரிவித்துள்ளார்.
சிரேஷ்ட அதிகாரிகளின் சேவையைப்பெறும் நோக்குடனேயே வயதெல்லை அதிகரிக்கப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.
[உ-7]

### தாழமுக்கம்...
(முதலாம் பக்கத் தொடர்)
நோக்கி வரும் என்பதால் மன்னார், காங்கேசன்துறை, மட்டக்களப்பு மற்றும் முல்லைத்தீவுப் பகுதிகளில் பலத்த காற்றுடன் கூடிய மழை எந்த நேரமும் பெய்யலாம் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-7)

### கரையோரப்...
(முதலாம் பக்கத் தொடர்)
னால் நான்கு பொதுமக்கள் காயமடைந்தனர். அவர்கள் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர்..
தனங்களப்பைச் சேர்ந்த மகாலிங்கம் சுகிர்தன் (வயது 14), நாகநாதன் செல்வரத்தினம் (வயது 48) அவரது மகளான தயாநந்தி (வயது 20) அல்லாரையைச் சேர்ந்த காசிப்பிள்ளை ராணி (வயது 49) ஆகியோரே காயமடைந்தவர்களாவர்.
பாசையூர் பகுதியிலும் சில ஷெல்கள் வீழ்ந்து வெடித்தன. ஆனால் எவரும் காயமடையவில்லை.
கரையோரப் பகுதியில் படையினரின் நிலைகளுக்கு அருகில் உள்ள பொதுமக்களை அங்கிருந்து விலகி இருக்குமாறு கோரும் அறிவித்தலை நேற்று இரண்டாவது நாளாக தமது 'புலிகளின் குரல்' வானொலி மூலம் புலிகள் விடுத்தனர்.
(உ-3-31-117-7)

### கூட்டணியின்...
(முதலாம் பக்கத் தொடர்)
இதே வேளை, தமிழ் மக்களின் அடிப்படைக் கொள்கையான சுயநிர்ணய உரிமை, தாயகக்கோட்பாடு, சுயாட்சித்தத்துவம் என்பவற்றை ஏற்றுக் கொண்டு, உடனடிப்போர் நிறுத்தத்தை ஏற்படுத்திய தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தையை நடத்துவதன் மூலம் இனப்பிரச்சினைக்கு மேற்குறித்த அடிப்படையில் நியாயமான தீர்வை ஏற்படுத்துவதைத் தனது கொள்கையாக முன்வைத்து ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளரை தமிழ் மக்கள் ஆதரிக்கலாம் எனவும்—
தமிழர் விடுதலைக் கூட்டணி அறிவித்துள்ளது.
(உ-7)

## மேற்கு வங்கத்தில் குண்டுவெடிப்பு

புதுடில்லி, டிசெ. 13
இந்தியாவின் மேற்கு வங்க மாநிலத்தில் இடதுசாரிக் கட்சி ஒன்றின் பொதுச் செயலாளர் வீட்டில் கடந்ததிங்கள் தினம் இரவு குண்டு வெடிப்புச் சம்பவம் ஒன்று இடம் பெற்றது இந்தச் சம்பவத்தில் நால்வர் உயிரிழந்தனர்.
மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சி பொதுச் செயலர் லால் மோகன் சிங் வீட்டிலேயே இந்தக் குண்டு வெடிப்பு நிகழ்ந்தது. அவரது மனைவி, மகள் மற்றும் ஏனைய இரு உறவினர்கள் ஆகியோரே இக் குண்டு வெடிப்பில் உயிரிழந்தவர்கள் எனத் தெரிவிக்கப்பட்டது.
[இ-6-9]

## இடம்பெயர...
(முதலாம் பக்கத் தொடர்)
சில பிரதேச மக்களை இடம்பெயருமாறு புலிகள் கோரி வருகின்றனர்.
'மக்கள் இடம்பெயராவிட்டால் என்ன செய்வது?' என்று புலிகள் தரப்பில் ஒருவர் கேட்க, 'அப்படியென்றால் ஓரிரு ஷெல்களை அடி! அவர்கள் இடம்பெயர்வார்கள்' என்று புலிகளின் தலைவர் ஒருவர் பதிலளித்ததை அவர்களது தொலைத் தொடர்பில் இருந்து நாங்கள் கேட்டுள்ளோம்.
மக்கள் குடியிருப்பு மீது கண்மூடித்தனமாக ஷெல் தாக்குதல் நடத்துவது கண்டிக்கத்தக்கது இதனை செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு போன்ற சர்வதேச அமைப்புக்களின் கவனத்துக்கு எழுத்துமூலம் கொண்டுவரவுள்ளோம்.
பொதுமக்கள் குடியிருப்பு மீது இத்தகைய கண்மூடித்தனமான தாக்குதல் எதையும் நாம் முன்னர் செய்ததில்லை; இனிமேலும் செய்யப் போவதில்லை.
புலிகளின் வேண்டுகோளை ஏற்று இடம்பெயர்வதா என்பதை மக்களே தீர்மானிக்கட்டும். நாம் அதைத் தடுத்து நிறுத்தவோ அதில் தலையிடவோ போவதில்லை.
தாக்குதல் நடத்துபவர்கள் நாங்கள் அல்லர்; புலிகளே. எனவே அந்தத் தாக்குதல்களில் மக்களுக்கு ஒன்றும் நடக்காது என்று நாம் உத்தரவாதம் தரமுடியாது.
ஆனால் புலிகளினால் யாழ்ப்பாணத்துக்குள் நுழையமுடியாது என்ற உறுதிமொழியை மட்டும் எங்களால் தரமுடியும்.
யாழ்ப்பாணத்துக்குள் புலிகள் நுழைவதென்பது இலேசானகாரியமாக அவர்களுக்கு இருக்கமாட்டாது என்பதைத் திட்டவட்டமாகக் கூறிவைக்க விரும்புகிறேன்.
எனவே இடம்பெயர்வதா என்பதை — தமது சொத்துக்கள், உடைமைகள் போன்றவற்றை விட்டுவிட்டு மீண்டும் ஒரு தடவை போவதா — என்பதை மக்களே தீர்மானிக்கட்டும்.
சொத்துக்களை விட்டுவிட்டு இடம்பெயர்ந்தால் அவற்றின் பாதுகாப்புக்கு யாரும் உறுதி தரமுடியாது. அவை சூறையாடப்படலாம்.
ஆகவே மக்கள் இது விடயத்தில் புத்திசாதுரியத்துடன் — ஆழமாகச் சிந்தித்து முடிவெடுக்கவேண்டும்.
இடம்பெயர்வதும் எங்கு வசிப்பது என்று தீர்மானிப்பதும் மனிதர்களின் அடிப்படை உரிமை. அதில் நாம் தலையிட்டுக் கட்டாயப்படுத்தப் போவதில்லை.
கட்டைக்காடு. வெற்றிலைக்கேணி புலிகளின் கைகளில் உள்ளதுஎன்பது உண்மையே. தந்திரோபாய நகர்வுகளை மேற்கொண்டு மழை வெள்ளம் நிரம்பிய அந்தப் பிரதேசத்தைக் கைவிட்டு, சில நூறு மீற்றர்கள் அப்பால் விலகிப் புதிய வியூகங்களை அமைத்து, பலமான முன்னரங்க நிலைகளை ஸ்தாபித்துள்ளோம்.
வெற்றிலைக்கேணிப் பகுதிச் சண்டையிலும், தனங்கிளப்புப் பகுதியில் தரையிறக்க முற்பட்ட புலிகள் மீது நாம் நடத்திய தாக்குதலிலும் 250 க்கும் அதிகமான புலிகள் உயிரிழந்துள்ளனர்.
வெற்றிலைக்கேணியில் 205 புலிகள் உயிரிழந்தனர் என்பதை அவர்களது தொலைத் தொடர்புகளை ஒட்டுக் கேட்டதில் இருந்து அறிய முடிந்தது. மேலும் பல நூற்றுக்கணக்கில் காயமடைந்தவர்களை அவர்கள் டிராக்டர்களில் ஏற்றிச் சென்றதைக் கடற்படை, விமானப் படையினர் கண்டுள்ளனர்.
தனங்களப்பில் தரையிறங்க முனைந்த புலிகள் மீது நடத்தப்பட்ட வான் தாக்குதலில் ஐம்பதுக்கும் அதிக புலிகள் உயிரிழந்ததை விமானப்படையினர் உறுதி செய்துள்ளனர்.
இத்தனைக்கும் படைத் தரப்புக்கு ஏற்பட்ட இழப்பு வெகு சொற்பமே. இந்தச் சண்டைகளில் முந்நூறுக்கு அதிகமான படையினர் உயிரிழந்ததாகப் புலிகள் கூறியிருப்பது முற்றிலும் தவறு. குடாநாட்டை புலிகள் கைப்பற்றுவது அவ்வளவு இலேசானதல்ல. அதற்குப் படையினர் அனுமதிக்கமாட்டார்கள் என்பதை யாழ். மக்களுக்கு தெரிவிக்க விரும்புகிறேன்'' என்றார்.—
(உ-3)

## வெற்றிலைக்...
(முதலாம் பக்கத் தொடர்)
களப்பு)
★ தபோதரன் (இராசமாணிக்கம் சந்திரமோகன் — அம்பாறை)
★ கிருஷாந்தினி (கதிர்காமத்தம்பி காஞ்சனா—மட்டக்களப்பு)
★ சபேசினி (சிதம்பரப்பிள்ளை யசோதா — மட்டக்களப்பு)
★ அன்பு (கணபதிப்பிள்ளை உதயசூரி — மட்டக்களப்பு)
★ யாழ்விழி (சண்முகராசா நாகேஸ்வரி—திருகோணமலை)
★ தபேக்கா (தர்மலிங்கம் சுலோசனா—மட்டக்களப்பு)
★ தேவகி (நற்குணசிங்கம் ஜெயமதி—மட்டக்களப்பு)
★ மனோன்மணி (அரசரட்ணம் சந்திரமதி—மட்டக்களப்பு)
★ பேரிலிங்கம் (தம்பிரட்ணம் ஜெயராசா—மட்டக்களப்பு)
★ கலாவரதன் (கணபதிப்பிள்ளை பாக்கியராசா—மட்டக்களப்பு)
★ பாவீரநாதன் (சோமானந்தபிள்ளைசத்தியானந்தன் —மட்டக்களப்பு)
★ கமலி (செல்வநாயகம் தங்கமலர்—மட்டக்களப்பு)
★ மாருதி (சந்தோசம் வவி—மட்டக்களப்பு)
★ சுதாஜினி (பிள்ளையான் [illegible] —மட்டக்களப்பு)
★ சாந்தி (பத்மநாதன் சுஜிந்திரா—மட்டக்களப்பு)
★ கேசவன் (தியாகராசா பிரவீண்குமார் — யாழ்ப்பாணம்)
★ தாமரை (நாகரட்ணம் காஞ்சனா — நெடுங்கேணி)
★ இசைச்செல்வி (நவரட்ணம் நகுலா—யாழ்ப்பாணம்)
★ நேசகுமார் (சித்திரவேல் தேவராசா — திருகோணமலை)
★ துளசி (கந்தசாமி கமலேஸ்வரன் — இயக்கச்சி)
★ ஜீவயோதியன் (கணேஷ் ரதீஷ்வரன் — அம்பாறை)
★ குணவேலன் (முருகுப்பிள்ளை குலேந்திரராசா — மட்டக்களப்பு)
★ சிவசங்கர் (தங்கராசா சர்வானந்தம் — திருகோணமலை)
இந்த நடவடிக்கையின் போது தொண்டர் படையைச் சேர்ந்த 7 பேர் உயிரிழந்தனர். அவர்கள் விவரம் வருமாறு:-
★ கேசவன் சிவராசா (உடையார்கட்டு)
★ நடராசா குலேந்திரன் (யாழ்ப்பாணம்)
★ நாச்சிமுத்து நேசையா (கிளிநொச்சி)
★ ஜெயராசா ஜெயக்காந்தன் (யாழ்ப்பாணம்)
★ சோமசுந்தரம் பிரபாகரன் (உடையார்கட்டு)
★ யோகராசா நிசாந்த குமார் (யாழ்ப்பாணம்)
★ மகாலிங்கம் ஜசிகாந்தன் (யாழ்ப்பாணம்)
(உ-7-4)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 13-12-1999 இல் அச்சிட்டு வெளியிடப் பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org